இணைந்த சோதிகள்

அக்டோபர், 1927

உ

17

ழல
ளஉ11, N28AG
N27.2.19
169829

ஓம் பரப்பிரம்மணே நம :

# ஆநந்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைப் பெருக்கி ஆநந்தத்தைத்
தரவல்லதான அநடவ விநோத நீதிகள் நிறைந்த
உயரிய செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

" எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." திருக்குறள்.

| | | |
|---|---|---|
| கமலம் - 2. | சென்னை : பிரபவஸு அற்பிசிமீ 1வ | இதழ் - 19. |
| Vol. II. | 1927-ம்ஸு அக்டோபர் மீ 17வ | No. 19. |


## ஆநந்த தர்சனம்

அவரவரிறையவர் குறைவிலரிறையவர்
அவரவர்விதிவழி யடையநின்றனரே.

" விநதாவினில் வேளையை விடுவது விவாழள்ளவர்க்கழகோ!" ஸதா பகவத்தியானத்திலேயே நமது காலத்தைச் செலவிட வேண்டும். எத்தொழிலைச் செய்தாலென்ன?—எந்த அவஸ்தையில் நாம் கிடந்தாலென்ன? நம் சித்தம் பரம்பொருளினிடத்திலேயே லயித்திருக்கவேண்டும். குழந்தை எவ்வளவு தான் விளையாடிக் கொண்டிருப்பினும் தாயின் ஞாபகம் அதற்கு சதா இருந்து கொண்டிருப்பது போலவும், வீட்டிற்குள் தாய் எவ்வளவு வேலைகளிற்கிடப்பினும் தொட்டிலில் நித்தரிக்கும் குழந்தையினிடத்திலேயே அவளது சித்தம் நிலைத்திருப்பதுபோலவும் நமது ஹிருதயமும் பகவானையே பின் பற்றி நிற்கவேண்டும். ஆசையென்னும் நீர் உள்ளதும், மன்மதனென்னும் காற்றால் வீசியடிக்கப்பட்ட மோஹங்களெனும் அலைகளின்வரிசையுடையதும், மனைவி யெனும் சுழி யுள்ளதும், புத்திர ஸஹோதரர் எனும் முதலைகளின் கும்புகளால் ஆரவாரிக்கப்பட்ட ஸம்ஸாரமெனும் மஹா ஸமுத்திரத்தில் முழுகியிருக்கும் நமக்கு பகவானிடத்துச் செய்யும் பக்தி யெனும் தெப்பமே பெரிய துணையாகுமென்று அறியக் கடவோம்.

* * *

" என் எண்ணமது சாமி நீ அறியாததோ !" ஓ! [illegible] உன் க்ஷணகாலமாயினும் பக்தியில்லாத [illegible] பூஜிகளை நான் [illegible] வம் வந்தென்ன ? பிறவியிலேயே அமைந்த உன் தீய ஒழிந்ததா ?

27.2.19

பார்க்கேன். காதுக்கு இனிமையான உம்முடைய சரிதத்தை விட்டு மற்ற பிரபந்தங்களைச் செவியாரக் கேளேன். பகவானே! உன்னைத் திரஸ்கரிப்பவர்களை மனதால் நினையேன். ஜன்ம ஜன்மாந்தரங்களிலும் உன் கைங்கர்யம் பெற்றிருப்பேனாக. ஸ்வாமி என் கைகள் வேறு காரியம் செய்யாமல் உமக்கு அஞ்சலி செய்திருக்குமாக. சிரம் வணங்கி யிருக்குமாக. பகவானைச் சதா எண்ணியிருத்தலால் சரீரம் ரோமாஞ்சிதத்துடன் பரவசமுற்று இருக்குமாக. ஹா! இத்தனை நாட்களாகப் பகவானை எண்ணாதிருந்தேனன்றோ எனச் சிந்தித்தலால் பயமடைந்து, மீண்டும் பகவத் பக்தி யுண்டாகுக. பகவானைத் தரிசித்தலாலும், தியானித்தாலும் கண்களில் ஆநந்த பாஷ்பம் பெருகுக. ஸர்வ காலத்திலும் உன் திருவடித் தாமரைக ளிரண்டின் தியானம் எனும் அமிர்தத்தைப் பானம் செய்வேனாக. பகவானே! எனக்கு இவ்வகையான ஜீவனத்தை அனுக்கிரகிக்கக் கடவீர்.

***

"இமயவரை யீன்றாய் கண்ணுக்கினியானே" என்று தாயுமானவர் பாடியிருக்கிறார். இதன் பொருள் என்ன? இமய மலையிற் பிறந்த என் தாயாகிய உமாதேவியின் கண்களுக்கு இனிமையாயிருப்பவனே! என்பதாம். பார்வதியின் கண்ணுக்குப் பரமேச்வரன் இனிமையா யிருப்பதுபோல், ஒவ்வொரு பதிவிரதையின் கண்ணுக்கும் அவரவருடைய கணவர் இனிமையா யிருப்பர். இவ்வாறின்றிப் புருஷரைக் கண்டால் எமனாக எண்ணுவதும், அவனை அற்பனாக மதிப்பதும், அலக்ஷியமாய் நினைப்பதும் சில தீய ஸ்திரீகளுக்கு இயற்கை. பர்த்தாவினிடம் உண்மையான விசுவாசமின்றி எத்தனை சுசுரூஷைகளைச் செய்தாலும் க்ஷேமம் பிறவாது. விசுவாசத்தோடு காரியங்களைச் செய்யாத வேலைக்காரனாலும் பிரயோசனம் கிடைக்காது. தெய்வம் முதல் வேலைக்காரனீறாக யாவரிடமும் உண்மையான அன்பு இருந்தாலன்றி சுகமுண்டாகாது. தெய்வத்தை உள்ளன்பில்லாமல் ஆயிரம் வருஷம் பூஜித்தாலும் பயனுண்டாகாது. ஆகவே, எவ்வித நிலைமையிலும் அந்தரங்க அபிமானம் இருக்கவேண்டுமென்பது சிந்திக்கத் தக்கது.

***

"காதல் மிகும் அணியிழையாரோ வாடுற்றேன்" என்பது பகவான் ஞான மூர்த்தியாய் வருவர் வருவர் என்றெண்ணி அவர் வாராமையால் துன்பமடைந்த தாயுமானவர் தன் நிலைமையைப்பற்றிச் சொல்லிக்கொண்ட வாக்கியமாகும். பிரிந்து சென்ற தம் கணவனார் குறித்த நியமப்படி வாராமையால், அவர்மேல் ஆசைமிகுந்து காதல் வெள்ளம் ததும்ப வாடுவர். இந்தத் துக்கத்தைவிடப் பெரிதானது வேறொன்றில்லை. ஆகவே மகானான தாயுமானவர் தாம் படும் அவஸ்தையை அந்தத் துக்கத்துக்கு ஒப்பிட்டு பகவானை நோக்கித் தம்மைக் காத்தருளும்படி வரவேணுமாய்ப் பிரார்த்திக்கிறார். ஆதலின் இவ்வாக்கியம் பக்தியின் பெருமையை யுணர்த்துகிறது. உண்மையான பக்தன் எப்போது கடவுளைப் பார்ப்போமென்று மனம் துடிப்பான். அவரை நினைத்து நினைத்து மனமுருகிக் கண்ணீர் விடுவான். அவருடைய [illegible] பித்தனைப்போல் அசைவற்று நிற்பான். எங்கே உண்மை [illegible] அங்கே கண்ணீர் ஆறுபோடுவது சகஜம். இத்த

148. பிறரிடம் நீ கொடுத்த அன்பை வெடுக்கென்று பிடுங்கினால், கடவுளும் அப்படியே உனக்குக் கொடுத்துப்பிடுங்கிக்கொள்வார்.

169829



கைய சிறந்த பக்தியை உள்ளன்போடு செய்யாமல், நுணல் கத்துவதுபோல் தண்ணென்று நாடக் கருத்தொன்றில்லாமல் வெறுமனே ஸ்வாமியின் நாமங்களைப் பிறர் மெச்சவேண்டி உச்சரிப்பதில் என்ன பயன்?

***

"நெஞ்சறியாத பொய்யில்லை, உள்ளமறியாத கள்ளமில்லை" என்னும் பழமொழிகளின்படி எந்த ஜாதியானாயினும், எந்த மதஸ்தனாயினும் தன் மனசாக்ஷிக்கு விரோதமின்றிக் காரியங்களைச் செய்துவரின் ஈசுவரனுடைய கருணைக்குப் பாத்திரனாவான். ஒவ்வொருவரும் தத்தம் மதத்துக்கு விரோதமின்றி வேதவிதி தப்பாமல் கர்மாக்களைச் செய்தால் சுகிர்தத்தை யடைவர். வேதத்துக்கும் மனஸாக்ஷிக்கும் விரோதமில்லாத காரியங்களைச் செய்வதில் ஜனங்களுடைய ஸம்மதத்தை நாம் எதிர் பார்க்கவேண்டிய அவசியமேயில்லை.

***

"ஏகாந்தமே இனிது" என்று ஔவை கூறியிருக்கிறார். இவ்வினிமையை யனுபவிப்பதில் காட்டிலுள்ள மிருகங்களும் பக்ஷிகளும் மனிதர்களைவிட சிரேஷ்டமானவை. மனுஷ்யன் ஏகாந்தமாயிருக்க ஸாத்தியப்படாது. அவனைத்தேடிப் பல நண்பர்களும் உறவினரும் வந்துகொண்டிருப்பார். அவன் ஈசுவரனைப் பஜிக்கும் ஸமயத்திற்கூட யாரேனும் ஸம்பாஷிக்க வருவர். சும்மாவிருப்பவனை வம்புக்கிழுப்பார் சிலர். பரிகஸிப்பர் பலர். மிருகங்களுக்கும் பக்ஷிகளுக்கும் இத்தனை ஹிம்ஸையில்லை. அவைகள் ஒன்றின்மேலொன்று வியாஜ்யம் செய்வதும், ஒன்றை யொன்று சூன்யம் வைத்துக் கொல்வதும் வழக்கமில்லை. கோள் சொல்லும் நிகிருஷ்டமான வாடிக்கையும் போலியன்பும் பசு பக்ஷிகளுக்குக் கிடையாது. மேற்கண்ட காரணங்களாலேதான் முற்காலத்தில் அநேக ரிஷிகள் கழுகுகளாயும், புறாக்களாயும், மான்களாயும் மாறி நிர்விசாரமாய்த் தவம் செய்தனர். இதன்றித் தியானத்திற்கு ஏகாந்தமே இனிது. பகவந்நாமத்தை சும்மா உச்சரிப்பதைவிட ஏகாந்தமாயிருந்து அவருடைய திருவிளையாடல்களை யெல்லாம் நினைத்து நினைத்து மனமுருகுவது சிலாக்கியம். ஸதா அவருடைய நினைவேகொண்டு அவரையே தேடி மனம் அலைந்தவா றிருக்கவேண்டும். அதுவே ஆத்ம பக்குவத்திற்கு மார்க்கமாம்.

***

"இனத்தோடு இனம்" என்பதுபோல, கூட்டமாக விருக்கும் பசுக்களின் மத்தியில் ஏதேனும் ஓர் புதுப் பசு போனால் அதை மற்றப் பசுக்களெல்லாம் மிகுந்த பரிவுடன் ஏற்று நக்கி விசுவாஸம் காட்டுகின்றன. வேறு ஏதேனும் ஓர் பிராணி அப்பசுக்களுக்கு மத்தியில் நுழைந்தால் அவைகளெல்லாம் அதைக் கொம்பால் குத்திப்போட்டுவிடுகின்றன. அதுபோல் ஸாதுக்களின் ஸங்கத்திற் செல்லும் ஸாதுவை மற்றவர்கள் எதிர்கொண்டழைத்து உபசரிக்கின்றனர். யாரேனும் மூர்க்கன் அவர்களின் சங்கத்தில் நுழைந்தால் அவனைக் கண்டு காதவழி விலகுகிறார்கள்.

***

"பரலோக சுகம்" உலகத்திலுள்ள ஆஸ்திகமதங்களெல்லாம் பரலோகமுண்டென்று கூறுகின்றன. அந்தப் பரலோகத்து இன்பமே மேலென்றும் அங்கு கஷ்டமென்பது இல்லையென்றும், அற்ப சுகங்களும் நிச்சயமான துக்

149. மனைவி அவர்களிடம் பிரீதித்தபோது புருஷனும் பிரீதித்தான். அவன் அவர்களை வெறுத்தபோது அவனும் வெறுப்பதானான்

ஹரி, நெல்லை

கங்களும் பூலோகத்திற்றான் உண்டென்றும் சொல்லுகின்றன. ஆதலின் பரலோக இன்பத்தைக் கருதி உலகினர் யாவரும் இகலோக சுகத்தை வெறுக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு மதத்திலும் உண்மை யுண்டென்பதை நம்பவேண்டும். புத்தியிருப்பதுடன் நல்ல ஹிருதயமு மிருந்தாற்றான் உண்மை புலப்படும். 100-பலம் மூளையைவிட ஒரு பலம் ஹிருதயம் உயர்ந்த தென்று ஒரு வித்வான் கூறியிருக்கிறார். மெஞ்ஞானத்தை யடைவதற்குப் பற்பல சாஸ்திரங்களினுதவியும், பெரியோரின் ஸகவாசமும், குரு கடாக்ஷமும், யோகாப்பியாஸமும், பிரம்மானுபவமும் இருக்கவேண்டும்.

***

"வேதாந்தத்தின் கருத்தென்ன?" உலக சுகம் அற்பமென்பதாலும், உலகம் பொய்யென்பதாலும் உலகத்தை வெறுக்கும்படி வேதாந்தம் சொல்லவில்லை. உலகத்திலுள்ள சகல பொருள்களையும் ஈசுவர ஸ்வரூபமாகப் பாவிக்க வேண்டுமென்பதே சாஸ்திரங்களின் உட்கருத்து. இதை யறியாது சிலர் மனைவிமக்களை அன்னத்திற்கு வுங்கவிட்டு சோம்பலை மேற்கொண்டு உட்கார்ந்திருக்கின்றனர். அப்படிச் செய்வதால் பாபம் ஸம்பவிக்கும். குழந்தைகளிடம் ஈசுவரச் சாயலைப் பார்க்கவேண்டும். சுற்றத்தாரிடம் பகவானைப் பார்க்கவேண்டும். நாம் அநுபவிக்கும் சுகத்திலும் துக்கத்திலும்கூட ஈசுவரனுடைய நினைவையே கொண்டிருந்தால் கிருதார்த்தர்களாவோம்.

***

"நிராசையானது பரம சுகத்தைத் தரும்." உண்டாகிற துன்பங்களெல்லாம் ஆசையாலேயே யாதலின், அவ்வாசையை யொழித்தால் துக்கமில்லை. துக்க நிவர்த்தியே சுகப்பிராப்திக்குக் காரணம். இதனால் பொருள் தேட வேண்டாமென்பது கருத்தல்ல. எல்லாப் பொருள்களும் ஜீவஸம்ரக்ஷணார்த்தம் இருக்கவேண்டியதுதான். சகல சுகங்களும் சௌகரியங்களும் ஏற்பட வேண்டியதுதான். ஆனால் அவைகட்கு நீ சொந்தக்காரனா யிராதே. எல்லா வஸ்துக்களும் பகவானுக்கு சொந்தமென்று அவர்மீது பாரத்தைப் போடு. எவ்வாறு ஒருகூலிக்காரன் எஜமானனுடைய பொருளைச் சுமந்து திரிகிறானோ, அவ்வாறே ஈசுவரனுக்குச் சொந்தமான சகல வஸ்துக்களையும் நீ வைத்துக் கொண்டிருக்கிறாய். எல்லாப் பொருள்களையும் ஈசுவரார்ப்பணம் செய். நீ அவற்றில் ஆசைவைத்து அவையனைத்தையும் உனக்கு உரியதாகக் கொள்ளாதே. மயங்காதே. இதுதான் நிராசையென்பதின் உண்மையான கருத்து.

புத்திமான்களுக்குப் புஸ்தகங்களே உற்றநண்பர்கள். பலவித ஆபரணங்களைக் கையில் அணிந்தும் பயனென்ன? ஒரு புஸ்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டால் பெருமையா யிருக்கும். ஸரஸ்வதி எப்போதும் வீணையையும் புஸ்தகத்தையும் விட்டுப் பிரிகிறதில்லை. வித்யார்த்திகளும் மற்றப் புருஷ சிரேஷ்டர்களும் ஸதா புஸ்தகத்தைக்கையில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். புஸ்தக வாசிப்பின் இன்பமே ஒரு தனி இன்பமாகும்.

150. பார்த்தால் சிறிய குட்டிதான். ஆனால் அது விளைக்கும் கலகமும் வேற்றுமை யெண்ணமுமோ வெகு பெரிது பெரிது.




# ஜாதீய பண்டிகைகள்

## (தீபாவளி நாள்.)

ஒவ்வொரு தேசத்திற்கும் ஜாதீய பண்டிகைகள் ஒரு பெரும் நிதிக்குவியல்கள் போன்றதாம். அவை சலித்துப்போன உள்ளத்திற்குப் புது வலிவையும் புதுஜீவனையும் தோற்றுவிப்பவைகளாம். என்றும் பெற இயலாத ஒரு புது உத்ஸாகத்தை எழுப்பிவிடும் திறமுடையவைகளாம். பூர்வகாலத்தின் மகத்தான வெற்றிகளையும், ஜன நிர்மாணத்தையும், ஸமூக ஊழியத்தின் பிரதானத்வத்தையும் இந்த ஜாதீய பண்டிகைகள் நமக்கு நினைப்பூட்டுகின்றன. நமது இல்லத்தின் வாயிற்படியோரம் வந்து கதவுகளைத் தட்டி நம்மை எழுப்புகின்றன. விழிப்பு கொள்ள வைக்கின்றன. நமக்குப் புதியதோர் ஊக்கத்தைப் புகட்டுகின்றன. ஒருவித நூதனமான பூரிப்பையும், மன எழுச்சியையும், அத்யந்த பரபரப்பையும் நமக்கு உண்டுபண்ணுகின்றன. தன்னைத்தான் அறியும் பக்குவத்திற்கு நம்மை அழைத்துச் செல்லுகின்றன. உயிருள்ள—உணர்ச்சியுள்ள மக்களாக நம்மை ஆக்குவிக்கின்றன. முன்னேறிச் செல்லக் கட்டளைகள் கம்பீரமாய்க் கொடுக்கின்றன. உன் காரியம் ஆகும் வரையில் உழைத்துக்கொண்டிரு எனக் கூறி, நம்மைப் புது உருவில்—புது வாழ்வில் மாற்றுவிக்கின்றன.

ஆ! ஜாதீய பண்டிகையா! அது எப்போது வருகிறது?—என்று ஒவ்வொரு நாட்டினரும் மிகுவிருப்போடும் எதிர் நோக்குகின்றனர். புது வருடம் பிறந்த புது நாளாகிய முதல் தினத்திலேயே

151. சென்ற வருஷம் அவர்களது வாழ்வின் தவிப்பிலே நீ களிப்புடன் அலக்ஷியமாய் அது இனி உருப்பிடாது என்றாய். இந்த வருஷம் உன் வாழ்வுக்கு வந்த விபத்தை யோசி.

அவ்வருடத்தின் பண்டிகைகள் எந்தத் தேதிகளில் என்று பார்த்துக் கொள்ளச் செய்விக்கின்றது. மற்ற எந்த வகையாலும் நுகர்வதற்கில்லாத ஒரு புது ருசிகரத்தை—ஆநந்த பூர்த்தியை இப்பண்டிகை நாளில் நாம் அடையப் பெறுகின்றோம். ஆ! அதன் பரவச இன்பம்—அன்றெல்லாம் நாம் பாராட்டும் உற்சாகம்—புளகிதம்—புதிய புதிய சிந்தைகளின் ஆநந்த அமிர்த ஊற்று இவையெல்லாம் இயம்பிடவும் ஒண்ணுமோ?

ஜாதீய பண்டிகைகள் என்பது அர்த்தமில்லாத விளையாட்டுகளன்று. நாமே உண்டாக்கிக்கொண்ட கொண்டாட்டங்களுமன்று. உண்பதும், உடுப்பதும், உல்லாஸப்படுவதுமான இவற்றிற்காக அவைகள் ஏற்படவில்லை. பூர்வத்தில் அவ்வக்காலங்களில் உண்டாகிய ஓர் பெரும் எழுச்சியினது அலைகளின் கூட்டமாகும் இப்பண்டிகைகள். அவற்றின் ஞாபகச் சின்னங்களாகவும் ஆகும் இவைகள். சிதறுண்டு நாலாவிடங்களிற் கிடக்கும் ஒரு பெரிய ஜனஸமூகத்தைக் குறித்த ஒரு நாளில் தன்னறிவுகொள்ள வைத்து, எங்கணும் ஒரேவித ஊக்க நினைவு மிகுந்து ததும்ப, யாவருமே உத்ஸாக ஆரவாரத்துடனும் குறித்த பண்டிகையைக் கொண்டாடி நிற்க, அந்தத் தீவிரமான புது எழுப்புதலினூடே புதியதோர் சக்தியையும் புது ஜீவனையும் புகவிட்டு, அனைவரையும் ஒரே ஸமூகமாய் ஒருமித்த சிந்தைகொள்பவராய் ஒன்றுபடுத்தி ஒரு ஜனநிர்மாணமாய்ப் பரிணமிக்கச் செய்தற்பொருட்டே—பிற்கால நலத்தினை நாடி அப்பூர்வ காலத்தில் அமைத்தனர் இந்த ஜாதீய பண்டிகைகளை நம்முன்னோர்.

நாளைக்கும் மேற்றிசை நாடுகளில் இவ்வாறான பண்டிகைகளை அவ்விடத்திய பிரஜைகள் வெகு ஊக்கத்துடனும் கொண்டாடி வருகின்றனர். பிரான்சு தேசத்தின்மீது ஒரு காலத்தில் ஜெர்மனியானது அடைந்த அரும் பெரும் வெற்றியை, அந்தத் தினத்தில் ஜெர்மனி அத்யந்த உஸ்ஸாகத்துடனும் கொண்டாடி மகிழ்பூத்திடுகின்றது. இவ்விதமே தாங்கள் ஸ்வதந்திரம் பெற்ற தினத்தை ஒரு ஜாதீயபண்டிகை நாளாகக்கொண்டு அவ்வத்தேசத்தாரும் பாராட்டிச் சீராட்டிச் சிறப்பித்து வருகின்றனர். அப்பண்டிகை நாட்களில் அவர்களிடத்துக் காணப்படும் ஊக்கம் ஒரு பெரிய ஜன ஸமூகக் கட்டுப்பாட்டினையும், நெஞ்சுத்திடத்தினையும், புதிய வலுவினையும் அவர்களுக்கு உண்டாக்குவித்து ஒருபுதிய அனலை—ஒரு ஆவிர்ப்பவ ஜோதியை எழுப்பிவிடுகின்றது. இதனின்றும் தோன்றும் ஆக்கிரக உணர்ச்சி நீராவியைப்போலவும் மின்சாரத்தைப்போலவும் வெகு வேலைகளைச் செய்யப் போதுமான திடத்தை யுண்டாக்கிக் கொடுக்கின்றது.

152. பிறர் துயரத்தில் உன் அநுதாபம் நல்லதன்மையோ டிருந்ததா? இல்லையாயின், அவர்களுக்கு வந்த துயரம் உனக்கும் திரும்பும்.



மேற்றிசை நாடுகளில் பிரபலித்து நின்றது ராஜரீகம்; அதற்கு இரண்டாவதாய் மதமானது பாராட்டப்பட்டது. அதற்கேற்ப ராஜீயத்துடன் கலந்து சிலதும், மதத்துடன் கலந்து சிலதுமாக ஜாதீய பண்டிகைகள் தோன்றுவதாயின. மேனாட்டில் மதத்திற்கும் ராஜீயத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. இரண்டும் தனித்தனி வெவ்வேறாக உள்ளவை. ஞானபூமியாகிய பாரதநாட்டிலோ மதம்—ஜனம்—தேசம் இம்மூன்றும் ஓர் உறவுபடைத்து, ஒன்றோடொன்று கலந்து ஒன்றைவிட் டொன்று பிரிதற்கில்லாதபடி அமைக்கப்பட்டுப் போயுள்ளன. மதமே முக்கியம்; அதுவே பிரதானம்; அதைக் காத்துப் பரிபாலிக்கவே இராஜ்யாதிபத்யம்—என்று இவ்விடத்திய ஏற்பாடு. இவ்வித நிர்மாணிப்பு நமது பூர்வீகர்களின் மகத்தான இராஜதந்திர நிபுணத்வத்தைக் குறிப்பிப்பதாகும். எந்த ஒருவித நிகழ்ச்சியும் மதச்சார்பினோடு கலந்தே பரிமளிக்கும். ஆறுகளோ—அவைகள் புண்ணிய நதிகள்! குளங்களோ—புண்ணிய தீர்த்தங்கள்! பர்வதப் பிரதேசங்களோ—யாத்திரா ஸ்தலங்கள்! ஊர்களோ—புண்ணிய க்ஷேத்திரங்கள்! பண்டிகைளோ—மத நிகழ்ச்சி கலந்த அமிர்த தாரைகள்! பாஷைகளோ—அதுவும் பரமன் அருளியவையாய் அதற்கென்று ஒரு தனிச் சரிதமும் கொண்டவைகள்! விருக்ஷங்களோ வானவரும் மாமுனிவரும் வந்து நட்டு வளர்த்தவைகள்! கவித்வங்களோ—யாவும் ஞானப்பாடல்கள்! கவீஸ்வரர்களோ—அருள் பெற்றவர்கள்! மக்களோ—ஞானத்திற்கும், நாகரீகத்திற்கும், வீரத்திற்கும், ஸகிப்புக்கும், ஸாத்வீகத்திற்கும் பிரஸித்தி வாய்ந்த தீரரத்நங்கள்! வாழும் நிலமோ—பூமாதேவி—பாரததேவி என்ற திருப்பெயர்கொண்டு இலங்குவது! கற்புறுமடவார்தம் நாடு இது! பரமனையே பாலகனாய்க் குழந்தை வடிவமாக மடியிலிருத்தி முத்தமிடும் அன்பினூற்று வெள்ளம் ததும்பப் பெற்ற ஞானதேசம் இது. இங்ஙனமாக மதத்தின் ஒரு தனி வியாபகமே எங்கு நோக்கினும் அமைந்து ராஜ்ய பரிபாலனமும் அதற்குள்ளே அடங்கப்பெறுவதாய்த் திகழ்ந்தன. இது பாரத பூமியின் முந்திய ஜனநிர்மாண முறையாகும். இன்னனைய சீர்தரு நாட்டின் ஜாதீய பண்டிகைகள் மதத்துடன் கலந்து மாண்பு மிக்கோங்கிப் பரிமளித்தற்குக் கேட்கவும் வேண்டுமோ?

இவ்வாறாய ஜாதீய பண்டிகைகளுள் தீபாவளி பண்டிகை முதன்மை பெற்றது. அது ஸ்ரீகிருஷ்ணபகவானின் ஒரு வெற்றியைக் குறித்துப் புகழ் கீர்த்தனம் பாடுவது. அந்த வெற்றியின் ஞாபகமாய் நடைபெறுவது. மக்கள் யாவரும் தம் வாழ்க்கைதன்னிலே

153. உன் கையில் இருந்தும்—"நான் எங்கே போவேன்" என்று இல்லை இல்லை யெனப் பேசாதே. உன் வாக்குப்படி பிறகு ஒரு காலம் இல்லாமலே போயினும் போகும்.

இவ்வாறாகவே வெற்றிபடைத்து மேகநாத தேவலோகவாழ்வு மேலு மேலு மேவவேண்டுமென்பதின் குறியாய் ஒளிர்வது. இளைஞர் முதல் விருத்தரீறாக யாவர்க்கும் புதிய ஊக்கம் புகட்டி உத்ஸாக மூட்டுவது. நாம் பண்டிகைகளை அர்த்தமில்லாத விதமாகக் கொண்டாடுகிறோம். அவற்றிலே ஞானச்சுடர் கலந்து ஒளிர்வதைக் கவனிக்கத் தவறிப்போனோம். அத்துணை மடமையிலே—அஞ்ஞானத்திலே—அந்தகாரத்திலே அமிழ்ந்து விட்டோம். அதனால் "இந்தவையத்து நாட்டிலெல்லாம் தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்"டோம். நல்லது எதுவோ அதனை நாம் எட்டோம். எட்டவே மறந்துவிட்டோம்.

நம்மை வளர்த்தவளென்றெண்ணி அம்மட்டில் ஓர் பெண்ணினிடத்து நாம் செலுத்தும் அன்புக்கும், இனி அவளே நம்மை ஈன்றெடுத்த மாதாவென அறிந்து அவளிடத்திற்கொள்ளும் அன்புக்கும் எத்தனையோ பேதமுண்டு. இதைப்போலவே தான் ஜாதிய பண்டிகைகளை அதன் பூர்ண தத்துவங்களை யுணர்ந்து கொண்டாடுகைக்கும், அர்த்தமற்ற விதமாக அப்பண்டிகைகளைப் பாராட்டிக் களிப்பதற்கும் எண்ணற்ற பேதம் ஏற்படும். இத்தெளிவு விவரம் நம் முள்ளத்தில் தைத்து நன்கு பதிவதாக.

1904-ம் வருஷத்தில், அதாவது இப்பொழுது தோன்றியுள்ள புதுத் தேசாபிமானிகள் எவருமில்லாத நாளில், "சுதேசமித்திரன்" ஆசிரியராகிய காலஞ்சென்ற தமிழ்நாட்டுத் தலைவர் ஸ்ரீமான் ஜீ. சுப்பிரமணிய ஐயர் தீபாவளி பண்டிகையை ஜாதீய பண்டிகையோடு ராஜீய பண்டிகையாகவும் மாற்றிப் புது உருவம் கொள்ளச் செய்வித்தார். சுதேசீய நிதிக்குத் தீபாவளியன்று வசூலிக்கவும் வழிவகைகள் உணர்த்தினார். அவர்முன்னர் காட்டிய வழியிற்சென்று நாம் இத்தீபாவளியை நமது ராஜீய தரிசனங்கட்கு ஓர் பரிணமிப்பு விழாவாக—நம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ளும் பண்டிகையாக—அதற்கான உறுதிகள், ஆணைகள் செய்துகொள்ளும் சபத நாளாக—வீர நாளாக—திருநாளாகப் பாராட்டிப் போற்றக்கடவோம். நம்மையெல்லாம் ஒன்றுபடுத்தி ஒரு ஸமூகமாக ஜனநிர்மாணப்படுத்தும் மகத்துவமிக்க பண்டிகையாகவும் தீபாவளியை நினைக்கக் கடவோம்.

இந்த உத்தமமான சிந்தையுடனும், நமது மனோபக்குவ உறுதிக்கொரு அடையாளமாக—தேச பிக்ஷையாக—எளியோர்க்கு ஒரு கவளம் அன்னம் கிடைக்கும்படியாக—கதர் உடைகளையே நாம் வாங்கித் தேசத்திருப்பணி செய்யக்கடவோம். வேதமுனி போன்றார்—விருத்தராம்—பாரதநாட்டு நலனுயர் பெருமான்—மகாத்மா

154. *பிறரைச் சேரவொட்டாமல் கத்தரித்துத் தூர விலக்குகிறவர்கள் தாங்களும் பிறகு கடவுளால் கத்தரிக்கப்பட்டு ஏமாறுவார்கள்.*



காந்திஜீ நாம் கதர் அணியவில்லையென்று விழி நீர் பெருக்கி மொழி தடுமாறி உலைவாய்ப்பட்ட மெழுகென உருகுகின்றார். அதனை நாம் கவனித்து கதரையே பிரதானப்பொருளாய் தீபாவளியில் போற்றக் கடவோம். பின்னுக்கு அமையப்போகும் ஒரு பெரிய ஜனநிர்மாணத்தின் சக்தி கதரில்தான் அடங்கியிருக்கின்றது. மகாத்மாஜீ தமது தென்னிந்திய சுற்றுப் பிரயாணத்தில் எல்லோரையும் கதரையே அணியுமாறு வேண்டிக்கொண்டிருக்கிறார். அவரது உபதேசத்திற்கு நாம் கௌரவம் கொடுக்கக் கடவோம். இத்துடன் தீபாவளியில் மதுமாம்ஸாதிகளை உபயோகிப்போர் தெய்வ சாக்ஷியாக அதனைத் தவிர்ப்பாராக. பரிசுத்த ஜாதீயபண்டிகையை இவ்வித கொலைப்பாவங்களால் அசுத்தமாக்காமல் பரிசுத்தமாகவே அநுஷ்டித்துப் பலன்பெறக்கடவோம். எதிலும் நமக்கு மேலாகிய சிந்தையே இருக்கட்டும். யாவருக்கும் தீபாவளி மங்களம் உண்டாவதாக.

---

*பிறரது அவசரத்தில் தன் வேலை.*

மற்றவர் ஒரு காரியத்துக்குத் தன்னிடம் அவசரப்படுகிற சமயத்தில்தான் சூட்டோடு சூடாகத் தன் காரியத்தையும் அவரிடம் சொல்லி அதை முதலில் நிறைவேற்றிக்கொண்டு பிறகு அவரது அவசர காரியத்தைப்பற்றிக் கவனிக்கப் புகுவது சில தந்திரிகளின் வேலை. அவசரமாய் இறங்கும்போது தான் வண்டிக்காரன் ஒன்றை எடுத்து வேறு பக்கம் மறைத்து விடுதலான தன் காரியத்தை நடுவே நுழைக்கிறான். வண்டி போய்விட்ட வெகு நேரத்துக்குப் பிறகு வண்டியில் வைத்த பொருள் ஞாபகத்திற்கு வருகிறது!

---

வான்கோழியை வளர்ப்பதில் 12 - பெட்டைகளுக்கு ஒரு சேவல் போதுமாம். 24 - பெட்டை இருந்தால் அவைகளை இரண்டு வகுப்புகளாகப் பிரித்து ஒவ்வொரு வகுப்பிலும் சேவல் ஒரு வாரம் இருப்பது நலமாம். ஒரு தடவைச் சேர்க்கையிலேயே கருப்பையில் இருக்கிற எல்லா முட்டையும் கருக்கொள்ளுமாம். பெட்டைக்கோழிகளைத் தினந்தோறும் சேவல் மிதிக்க வேண்டுவதுபோல் இதற்கு வேண்டுவதில்லை.

---

155. *நினைவுக்கு வந்த ஒரு நல்ல யோசனை ஒரு ஈயின் தொந்தரையால் எப்படியோ மறந்து போகிறது!*

# நட்பு

(192-ம் பக்கத் தொடர்ச்சி.)

**பலர் நடுவில் நண்பரைப் பழியாது இருத்தல்**

மேலும், நட்பினருளொருவர், எத்தகைக் குற்றமுடையவரா யிருந்தாலும், பலர்முன் அவர் குணங்களை எடுத்துக் கூறிப் புகழ்ந்தும், இரகசியத்தில் அவர் குற்றத்தை எடுத்துக் காட்டிக் கண்டித்தும் அவர் மரியாதைக்குக் கேடுநேராமல் குற்றங் களைதல் உண்மை நட்பினர்இயல்பாம். அன்றி, அவரிடத்து நம்பத் தகாத தீய நடத்தை யேற்படுமாஞல் அவர் நண்பன் அதைந்தன்ஞல்பொறுத்துத் திருத்தக் கூடியமட்டும் திருத்தமுயல வேண்டும். அப்போதுந் திருந்தாமற் போனல் அவனது தீய வொழுக்கத்தைப் பலருமறியவெளிப் படுத்தாமல் அவனது சிநேகத்தை விரைவில் தூரத்தில் விலக்கிவிடுதலே உத்தமம். “நட்டார் புறங் கூறன் வாழ்தல் நனியினிதே” என்றூராதலின்.

**முகஸ்துதி மொழியாமை.**

தவிர, களங்கமில்லாத நட்புக்கு முகஸ்துதி கூடாதாம். ஏனெனில், முகஸ்துதி செய்பவர், தம் நண்பர் குற்றத்தைத் தம்மிருவரிட மிருந்தும் மறைத்தலாகிய குற்றத்தைச் செய்தவராகிரூர். நண்பரிடத்துள்ள குற்றங் களைவதே உண்மைச் சிநேகத்து முதற் கடனுதலால் அவர் நட்புநிலை தவறியவராகிரூர்.

**உண்மை நட்பின் நிறைந்த நிலைமை.**

முடிவாகக் கூறுமிடத்து, நட்பிற்கு நிறைந்த நிலைமை எதுவெனில்,—மேலே கூறியசிநேக தருமத்தி னின்றும் வழுவாது, உயர்வு தாழ்வு பணிவு அச்சம் முதலியவை யின்றி கண்ட குற்றங்களைந்தும், உற்றிடத்துதவியும், பிழை பொறுத்தும், பலர் நடுவில் பழியாதிருந்தும், முகஸ்துதி மொழியாமலும், தம்மில் ஒருவனுக்கு அறம் பொருள்களில் தளரா வண்ணம் உதவியும் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து வேளைக்கேற்றபடி நடந்து கொண்டும், எக்காலத்தும் அவர் நட்பினின்றும் நீங்காதிருத்தல் என்பதாம். “போற்றுத வென்பது புணர்ந்தாரைப் பிரியாமை.”

**நட்பின் பயனுக கனிகளாக சதுர்வித புருஷார்த்தங்களைக் கூறுதல்.**

இவ்வளவுங் கூறியவற்ருல் நட்பின் பயன் ஒருவாறு விளங்கி யிருக்குமாயினும், அதை மீண்டு தொகுத்துக்கூறுவதும் முறையாம். நெருப்பும்நீரும்நம்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாய்ப் பல விதத்தில் பயன்படுகின்றன. ஆனல் மனச் சந்துஷ்டியும் சந்தோஷமும், திறமையும் உரமும் அளித்து நம் வாழ்நாளைப் பாழ்நாளாக்காமல் நம்மின்பத்தைப் பெருக்க நட்பு பயன் படுவது போல் அவை பயன்படுவதில்லை.

156. ஒருவருக்கு நல்லது செய்தபோதுதான் நம்மை யொரு புதிய பொல்லாப்பு தொடர்கிறது. இது ஏனே?



“செயற்கரிய யாவுள
நட்பினது போல்
வினைக்கரிய யாவுள
காப்பு.”

என நாயனர் நவின்றபடி சிநேக வர்க்கம் போல் சம்பாதித்தற்கு அருமையான பொருளும், நாம் செய்யுங்காரியங்களுக்குக் காவலாகவும், பகைவர் பண்ணும்துன்பங்களுக்கு இடையூருகவுமுள்ள பாதுகாவலும் வேறொன்றில்லை. உண்மை நட்பே சக்தியுஞ் செல்வமுமாய் வாழ்க்கைக்கு மூலகாரணமாயிருப்பது. இதனுற் பெறலாகும் நீங்கனிகளின் தன்மை வருமாறு:—துன்பத்தைத் தொலைத்துத் துயரைத் தடுப்பது ஒன்று, சுகத்தை விருத்தி யாக்கிச் சந்தோஷத்தைக் கொடுப்பது ஒன்று, எண்ணிய காரியத்தை இனிது முடிப்பது ஒன்று, பக்தி நெறி காட்டி முக்தி கூட்டுவிப்பது ஒன்று. முடிவாகக் கூறுமிடத்து நட்புஎன்னும் விருக்ஷம் சதுர்வித புருஷார்த்தங்களாம் கனிகளைக் கனிவித்துக் கொடுக்கிறது எனலாம்.

(தொடரும்.)

லக்ஷ்மி வெங்கடராமனன்.

## வடகலை தென்கலைப் போர்!

சாதிவித்தி யாசமிகுத் தொற்றுமைவிட் டிந்தியா தவிக்கும்போது
சோதிவட கலையுந்தென் கலையுமெதி ராடிநிற்குஞ் சூட்சிகண்டால்,
ஆதியண்ணு மலைப்பானை ஆறுகொண்டு போகமற்றையமர்தெய்வங்கள்
ஓதியசக் கரைப்பொங்கற் கொப்பாரி வைத்தகதை வொவ்வுந்தானே!

### பரஸ்பர சந்திப்பு.

இதற்குமுன் காணுதிருந்து புதிதாய் ஒருவரைக் காணும்போது சில முகங்கள் பிடிக்காமலே போய்விடுகின்றன. அதற்கேற்ப அவர்கள் முகமும் சுயகாரிய நாட்டத்தில் இருப்பதால், இவன் அன்புக்காக வராமல், தன் காரியத்துக்காக வந்திருக்கிருன் என்று நமது மனம் எண்ணிவிடுகிறது. உடனே அவனிடத்து வெறுப்பும் தோன்றுகிறது. அதற்குத் தகுந்தபடியே அவனும் அன்பின்றி இருப்பதில், அந்த சந்திப்பு பின் தொடர்பு இன்றி அவ்வளவுடன் முடிந்துவிடுகிறது.

157. தன் கைப்பட எழுத வேண்டிய கடிதத்தைப் பிறரைக் கொண்டு எழுதிக் கையெழுத்து மட்டும் தான்இடுவதேன்? அன்பு குறைந்ததால்.




## வித்தியாசாகரம்:—

[விநோத சம்பவங்களும் ஹாசியங்களும் நிறைந்த தமிழ்நாவல். மூன்று அழகிய ஹாப்டோன் படங்களுடையது. ஆசிரியர் ஸ்ரீமான் வடுவூர்-கே. துரைஸாமி ஐயங்கார் பி. ஏ. அவர்களாவர். விலை ரூபா 1-4-0.]

ஆசிரியர் இயற்றிய நாவல்களில் இது ஒரு புது விதம். நூதனச் சுவை. கவிதாயின்பம் பெரிதும் கொண்டது. ஹாஸ்யரஸம் ஸம்பூர்ணமாயுள்ளது. பேசாமடந்தை போன்று சிரிக்கக்கூடாதென்று எவ்வளவு சாமர்த்தியம் காட்டினும் அதையும் மீறிக் குலுங்கக் குலுங்க நகைக்க வைத்துவிடும். மிகு திவ்யமான கற்பனை. ஆபாசம் கடுகளவுமில்லை. பக்திமயமாய்ப் பரவசந் தருகின்றது. பத்திரிகா விளம்பரங்களைக் கொண்டு மணஞ்செய்ய நினைப்போருக்கு இந்த நாவல் தங்கமான ஒரு நல்ல படிப்பினை. வாசக நடையோ மிகு கம்பீரம், அத்யந்த ஹாஸ்யம், ஆற்றின் வேகம் போன்ற தடைபடாத போக்கு. ஆங்காங்கு பொறுக்கிச் சேர்த்துள்ள பதங்களின் பொருத்தமே பொருத்தம். மாப்பிள்ளையாவதற்குச் சென்றவர் பரமஹம்ஸராக மாறிவிடுகையும், அவர் ஒரு பெண்ணைப் பேயோட்டப் போவதும், நடுவில் உள்ள தாகனை சாமியாரின் சமர்த்தும் மிக்க வேடிக்கை. அவனுக்கு அனுமார் என்ற பேர் வெகு சரி. சம்புதானபுர வரலாறு சிரிக்காமற் படிக்கமுடியாது. இவ்விதச் சிரிப்பே கதை முற்றிலும் வருதலால் எதை உயர்வாக எடுத்துக்கொண்டு குறிப்பிட்டுப் பேசுவதென்று தெரியவில்லை. எல்லாமே சக்கரைக் கட்டியென்று சொல்லிவிடுவதே சரி. ஜமீன்தார், தாசி, பாகவதர், ஜமீன்தாரின் பத்தினி, அவர் குமார்த்தி, வித்தியாசாகரர்-இவர்கள் இக்கதைக்குப் பிரதான புருஷர்களாயிருந்து வெகு நன்றாக நடிக்கின்றார்கள். இறுதியில் இன்பமான முடிவு. மந்திரவாதிகளை நம்பவேண்டாமென்பதை பிரத்யக்ஷ ரூபமாகக் காட்டப்பட்டுள்ளது. நெடுநாள் வரைக்கும் யுவதிகளுக்கு விவாகம் செய்யாதிருந்து விடுவதின் கேடுபாடுகட்கு இந்த நாவல் ஒரு நல்ல சவுக்கடி. இந்த அருமையான நாவலின் புதுச் சுவையினைத் தமிழ் நாட்டினர் அனைவரும் ருசித்துப் பார்க்கவேண்டுமென்பது நமது விருப்பம். ஆசிரியர் வாழ்க.

***

## சுரேந்திரன்:—

[ஓர் துப்பறியும் தேசியத் தமிழ் நாவல். ஆசிரியர் ஸ்ரீமான் திருவாரூர் கே. கோவிந்தராஜன் அவர்கள் விலை அணா 8.]

கதையும், நடையும், தேசிய மணங் கமழுகையும் சந்தோஷம். கற்பனையும் நன்றாகப் பொருந்தியுளது. கதாநாயகனின் உத்தம குணங்களும், கதரினிடத்துள்ள வாஞ்சையும் கொண்டாடத் தக்கது. ஆண் உருத்தாங்கிய கதாநாயகிக்குக் கதையிலேயே வேலையில்லை. அந்நங்கையை வீட்டிலேயே இருக்க விட்டு வைப்பதுதான் சரி. இன்னும் கொஞ்சம் கற்பனைச்சரக்கு கூடியிருந்தால் நல்லது. துப்பறியும் விதம் நன்கு எழுதப்பட்டுள்ளது. அடுத்த பதிப்பில் இன்னும் இதில் அதிகத் திறம் காண்பித்து நேர்த்திபடுத்தப் பார்க்கவேண்டும். கதை நன்றாக முடிக்கப்பட்டுள்ளது. ஆசிரியருக்குத் தமிழகத்தின் ஆதாவு கிடைக்குமென்று நம்புகிறோம்.

158. எழுத்துப் பிரதியானது விவாக மில்லாத கன்னிகைக்கும், அச்சான பிரதியானது மணமான பெண்ணுக்கும் நிகர்.



இந்த நாவல்கள் "ஆநந்தகுண போதினி" ஆபீஸில் கிடைக்கும். மற்றவை மறு ஸஞ்சிகையில் காண்க.

சந்தேகப்படு :—ரயிலில் உன் சாமான்களை உன் அநுமதியின்றி எடுப்பதும் பார்ப்பதுமாய், உன்னுடன் அதிக பிரியமாகவும் இருப்பதாக ஒருவன் நடித்தால் அவனிடம் ஏமாறாதே. அவன் திருடனே என்று சந்தேகப்படு.

### நம்மிடம் வந்து நிற்பவர்.

நம்மிடம் அந்தக் காரியத்தைப் பற்றிப் பேசி முடிப்பதற்காக அவர் பல நாளாய் எண்ண மிட்டுக் கொண்டிருந்தவர். அதற்காகவே அவர் தன் வீட்டிலிருந்தும் வெகு துரிதமாகப் புறப்பட்டவர். அப்படிப் புறப்படுவதற்காகத் தன் வேலைகளை யெல்லாம் ஒரு ஒழுங்கு செய்து முடித்துவிட்டுத் தயாரானவர். இப்பொழுது நாம் என்ன பதில் சொல்லப்போகிறோமோ வென்று ஏக்கத்துடன் நமது வார்த்தையை எதிர்பார்த்திருப்பவர். அவரது தற்போதைய நிலையில் நாமும் பிறகு ஒரு சமயம் வேறொருவரிடத்தில் இப்படிக் கவலையுடன் நிற்கவேண்டிய வேளையும் வரும். அப்போது நமக்கு மற்றவர்கள் எப்படி நடக்கவேண்டுமென்று அந்த சமயம் நாம் விரும்புவோமோ, அந்த நிலையில் இப்போது நம்மை வைத்துப்பார்த்து, நம்மிடம் இத்தருணம் வந்து நிற்பவருக்கு நம்மாலான உதவியை இல்லை யென்று சொல்லாமல் செய்தனுப்பக் கடவோம். அது வீண் போகாது. அதைப் பற்றிய நல்லதான ஒரு குறிப்பு கடவுளின் கையில் இருக்கிற நமது ஜீவிய தினசரியில் எழுதிவைக்கவும்படும் என்பதை நாம் உணரக்கடவோம்.

159. அச்சிட்ட கடிதத்தில் தபால்கள் எழுதுவது மகா பெரிய மயக்குள்ள வியாபார தந்திரம்.

# நமது கடை



இந்தத் தீபாவளி முதற்கொண்டு நாம் ஒரு புதிய கடையைத் திறந்திருக்கின்றோம். பிரதி மாதமும் நமது கடையில் நடக்கும் வியாபாரங்களைத் தெரிவித்து வருவோம். மாதத்திற்கு ஒரு வாரம் தான் நமது கடை வியாபாரம்.

யாம் கல் வியாபாரி. கருங்கல்லன்று, செங்கல்லுமன்று ; மாணிக்கக் கற்களும் நவமணிக்குவியல்களும் வைத்திருக்கின்றோம். எமக்குச் சரக்குக்கொடுக்கிற ஆசாமிகள் ஒவ்வொருவரும் லோக அநுபவங்களில் நன்கு பண்பட்டவர்கள். ஆகவே நமது கடை உலகத்துக்கு உபகாரம் செய்யவந்த அநுபவ ஞானக் கடையாக இருக்கும். நீங்கள் எவ்வளவு கூடைகள் கொண்டுவந்தாலும் காலியில்லாமல் நிரப்பிக்கொடுக்க எங்கள் கடையில் எப்போதும் மூட்டை மூட்டையாகச் சரக்குகள் கையிருப்பில் இருக்கும்.

கிலிட்டு நகைகளும், அற்ப சொற்ப கற்களும் எங்களிடம் கிடையாது. அவை வேண்டுமானால் வேறிடம் கேட்கவும். நமது கடைச் சரக்குகளைப் பார்த்துச் சிலர் முகம் கோணும்படியும் இருக்கும். அது அவர்கள் குற்றம். அதற்கு நாம் என்ன செய்யக்கூடும்? சிலராவது காயப்படாமல் போரிலே பெரிய வெற்றியின் மகிழ்வு நமக்குக் கிடைக்குமா ?

நாம் போதிக்க வந்திருக்கின்றோம். போதகாசிரியரை எதிர்ப்பது ஞாயமல்ல. அவரவர் தரமுணர்ந்தே பாடம் சொல்வோம். காலமறிந்து செய்வன செய்வோம். உபாத்தியாயருக்குப் புத்தி சொல்லப் புறப்பட்ட பிள்ளை யுருப்படாது. பணத்துக்காக யாம் உழைக்க வெளிவரவில்லை. குணம் சேராத பணத்தை யாம் மதிக்கவே மாட்டோம். இனி நமது கடையின் வியாபாரங்களை அடுத்த மாத முதல் எதிர்பாருங்கள்.

பொன் வண்டு செட்டியார்.

### தடுமாறிய நிலை !

சிலருக்குத் தங்களுக்கு இருக்கும் ஏராளமான சொத்தின் அளவு தெரிவதில்லை. ஏதும் இல்லாதவர்கள் போலவே நடந்து பிறர் எச்சிலுக்கு ஏங்கி நிற்பர். எவராவது தந்தால் வெகு பிரியமாய் ஏற்பர். பிறருக்கு இருக்கும் சொத்தையே பிரமாதமாக நினைத்து அவர்களுக்கு வணங்கி சலாம் போட்டுப் போய்விடுவர். எவ்வளவு இருப்பினும் எதிலும்பட்டுக்கொள்ளாமல் விலகி, இல்லை இல்லை யென்ற பாட்டையே பேசிக் கடைசியில் ஏதும் இல்லாமல்தானே தொலைவர். இத்தடுமாறிய நிலை ஏனோ?

160. சயாலமே முற்றியவனை அவன் முகமே காட்டிவிடும். அவனுக்கு உண்மை அன்பும் உத்தம நட்பும் கிடைப்பது அருமை.






“அடிக்கடி நான் உன்னைத் தொந்திரவு செய்வதாக என்மேல் வருத்தப் படாதே. ஸ்ரீநிவாசா! உன்னையன்றி வேறு யாரிடத்தில் என் மனதிலுள்ளதைச் சொல்லிக் கொள்வது? நீயோ துக்க சாகரத்தில் ஆழ்ந்திருக்கிறாய். ஆபத்துக் காலத்தில் அருமைச் சிநேகிதனன்றி வேறு எவர் எனக்குத் துணை? தந்தையோ எனக்கு விரோதமாயிருக்கிறார்; தாயும் என்னை வெறுத்து விட்டாள்; எவ்வளவு அடங்கி ஒடுங்கி நடந்தும், கொஞ்சம் தவறிவிட்டால் “அவன் கெட்டவன்” என்ற முடிவுக்கு வந்துவிடுகிறார்கள் பெற்றோர்கள்! அப்பப்பா! என்னே அவர்களின் மனவேற்றுமை! அப்படித்தான் நான் என்னதவறு செய்து விட்டேன்? எனது அத்தை மகளும், பழையகாலத்துப் பைத்தியத்தின் ஒருத்தியுமாகிய “மீனுவை” நான் மணக்க முடியாது என்று கூறியது ஒரு பெருந்தவறா? தங்கள் சந்ததிகளின் பிற்கால சுகத்தைச் சிறிதும் கருதுவதில்லை நமது நாட்டு முதியவர்கள். நான் எல்லோருக்கும் ஒரு குற்றம் கற்பித்ததற்காக என்னைக் கோபியாதே; நிலைமை அப்படித் தானே இருக்கிறது! கல்வி, ஒழுக்கம், உருவம் இவற்றில் மேம்பட்டவளான அந்த ‘சுந்தராங்கி’யை நான் ஏன் விரும்புதல் கூடாதோ?” என்று ஓர் நாள் மாலை நேரத்தில், சென்னைக் கடற்கரை மணலில் வீற்றிருந்த துரைசாமி தன் தோழனிடம் கூறினான்.

“நான் என்ன துக்கத்தில் அமிழ்ந்துகிடக்கிறேன்? பி. ஏ. பரீக்ஷையில் தேறவில்லை என்றா? நான் அதை ‘அதிர்ஷ்டம்’ என்றே நினைக்கிறேனுக்கும். ஒவ்வொரு வருஷமும் நடைபெறும் பரீக்ஷை யென்னும் கோட்டையினை ‘முற்றுகை’ போடுவதில் தோல்வியுற்ற என்போன்ற அநேகர், தற்கொலை செய்துகொள்ளும் சம்பவம் சாதாரணமாக நடைபெற்றுவரும் இந்தக் காலத்தில், நான் இவ்விதம் கூறுவது உனக்கு வியப்பையளிக்கும். இதில் வியப்பு ஒன்றுமில்லை ; பெரிய பெரியகோட்டையினையும்(பரீக்ஷையையும்) ஆண்மையோடு தனக்கு அடிமைப் படுத்திய வீராதிவீரர்கள் (சர்வகலா சாலைப் பட்டதாரிகள்) ‘இன்னும் தமக்குத் தகுந்த அரசபதவி (உத்தியோகம்) கிடைக்கவில்லையே’ என்று

161. தடுமாறிய வாழ்வில் மனம் சோர்ந்தவர்கள் அப்படியே கண்ணைமூடி விட, அவர்களுக்குப் பிறகு அந்தக் குடும்பமோ—? ஐயோ! பரிதாபம்!!

திண்டாடி நிற்கும் இப்பொழுது அதற்காக நான் ஏன் வருந்தவேண்டும்? நீயாவது சென்னை ராஜதானியிலேயே பி.ஏ. (ஹானர்ஸ்) பரீக்ஷையில் முதல்வனாகத் தேர்ச்சி பெற்றதைக் குறித்து எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஆனால் இன்னொன்று கூறினையே, பிறமதத்தினளாகிய சுந்தரம் என்னும் பெண்ணைக் குறித்து; அதுமட்டும் எனக்குச் சிறிதும் விருப்பமில்லை. உன்னைப் பெற்று வளர்த்த 'இந்தியச் செல்வி' (ஹிந்து மதம்) கதியிழந்து, நிலைகுலைந்து வருந்தி நிற்கும் இந்த வேளையில், அவளைப் பராமுகம் செய்து, அந்நிய மாதை ஆதரிக்கப் புகுவது எவ்வளவு நன்றிகெட்ட செய்கை?" என்றான் ஸ்ரீனிவாசன்.

"நீ கற்றகல்வி இவ்வளவுதானா? 'காங்கிரஸ்' என்கிறாய்; 'காந்தி' என்கிறாய்; 'தீண்டாமை' என்கிறாய்; அதோடு 'ஒற்றுமை' என்றும் கூச்சலிடுகிறாய்; அவையெல்லாம் 'வெறும் வேஷம்—என்று அப்பொழுதே சொன்னேன்; இப்பொழுது நீயே அதை நிரூபித்துக் காட்டிவிட்டாயே! நீ ஆங்கிலத்தில் நன்றாகப் பயிற்சி பெற்றிருந்தும், பழைய காலத்துப் பைத்தியங்களாகிய 'கண்ட பேரண்ட சாஸ்திரி'களையும், 'கத்திரிக்காய்ப் புலவர்களையும் போலப் பழம் பாடத்தையே ஒப்புவிப்பது உனக்கு அழகல்ல. அவள் கிறிஸ்து மதத்தைச் சேர்ந்தவள் என்பதற்காக அந்த மதத்தையே வெறுத்துவிடலாமா?"

"அடே! துரை! நீ அணிந்திருக்கும் 'பூட்ஸு'க்கும், 'நிஜாரு'க்கும், தலைமயிரை வெட்டி விட்டிருக்கும் நேர்த்திக்கும் நீ ஒரு துரைதான்; அதற்கேற்ப உனக்கு ஒரு 'லேடி'யும் தேவையே; அதற்காக என்னைச் சந்தியில் இழுத்து விடாதே; மதத்தைப்பற்றி நான் ஒன்றுங் கூறவில்லை; அல்லது அதைக் குறித்துதான் நமக்கு என்ன தெரியும்? 'கருணாசாகரன்' எனில் ஏசுநாதருக்குத் தான் தகும்; அவருடைய உண்மைத்தத்துவத்தை யறியாமல், ஒரு பெண்ணுக்காக அந்த மதத்தைத் தழுவப் போகிறேன் என்கிறாயே, அதைத்தான் அடியோடு மறுக்கிறேன்."

"நீ வேண்டுமானால் மறந்துக் கொண்டிரு; உலகம் இப்படியே இருந்து விடப் போவதில்லை; என்னையே முழுதும் நம்பிவிட்ட ஒரு மாதை மோசம் செய்வதைக் காட்டிலும், ஒரு மதத்தினின்றும் இன்னொரு மதத்தில் சேருவது அவ்வளவு பெரிய நன்றி கெட்ட செய்கையா? உன் கோணலை இப்போது தான் அறிந்தேன்."

"சகோதர! என் மனதில் பட்டதை நான் சொன்னேன். அதற்காக என்னைக் கோபிக்காதே; உன் விருப்பம் போல் நீ நடந்து கொள்; நான் அதற்குக் குறுக்கே நிற்கப் போவதில்லை. அதோ! உனது காதலி உன்னைத் தேடி வருகிறாள். நான் இங்கிருப்பது உங்கள் பேச்சுக்கு இடையூறாக இருக்கும்; விடைகொடு, போய்வருகிறேன்" என்று கூறிச் சென்றுவிட்டான் ஸ்ரீனிவாசன்.

அவ்விருவரும் சென்னை "பச்சையப்பன் கலாசாலை" மாணவர்கள். தஞ்சை ஜில்லா மேலுங்குடி ஸ்ரீமான் மருதவாணம் பிள்ளைக்கு மிக நெருங்கிய உறவினரான ஒருவருடைய குமாரன் ஸ்ரீனிவாசன். கூத்தாநல்லூர் பிரபல மிராசுதாராகிய ஸ்ரீமான்—இல்லை, ராவ்பகதூர் ஏழு

162. அதிகமாக இடம் விட்டு வீடு கட்டுவோன் முடிவில் கடனுடன் இறக்கிறான். வீடு கடனுக்குச் சரியாகிறது!



மலைப் பிள்ளையின் செல்வமகன் துரைசாமி. ராவ்பகதூர் ஏழுமலைப் பிள்ளை அநேகமாக எப்பொழுதும் இங்கிலீஷ் "மோஸ்தரா"கவே உடை தரித்திருப்பார். அடிக்கடி துரைமார்களைப் பார்க்கப் போகும் பொழுது, அவர்களுடைய "பொட்லர்களோடு பேச நேரும் பாக்கிய வசத்தால், நமது பிள்ளையவர்களும் அரை குறையாக இங்கிலீஷ் பேசக் கற்றுக்கொண்டார். அதிகாரிகள் அந்தப் பிரதேசங்களில் ஏதாவது ஓர் காரியமாக வரநேரிட்டால், நமது பிள்ளையவர்களின் 'மோகனவிலாச' பங்களாவில் தான் 'மூகாம்' போடுவார்கள். அப்பொழுது அவர் தமது காசையெல்லாம் தூசாக நினைத்துச் செலவிடுவார். சேலம் ஸ்ரீமான்—அப்துல் ரஹிமான் சாயபு அவர்கட்கும், சென்னை "ஸ்பென்ஸர்" கம்பெனிக்கும் அப்பொழுது நல்ல வியாபாரம். மா, ஆரஞ்சு முதலிய 'பழ'வகைகளாலும், விஸ்கி, வொயின் முதலிய 'குடி'வகைகளாலும் தமது பங்களாவை அலங்கரித்து விடுவார். இவ்வாறு அதிகாரவர்க்க தேவதைகளுக்கு தாசானு தாசனாய் உழைத்து, அவர்களுடைய கிருபாவிலாச நோக்கத்தால் "ராவ்பகதூர்" என்னும் முதல் நிலையை அடைந்து விட்டார் நமது பிள்ளையவர்கள். இன்னும் 'திவான் பகதூர்' 'ஸர்' 'ராஜா' முதலிய சுவர்க்கப் பதவிகள் அவருக்குக் காத்திருக்கின்றன. இச்சமயத்தில் தான், ஐயோ; அந்தப் பாழும் பிரமன் அவர் தலையில் பெரிய பாறாங்கல்லைப் போட்டுவிட்டான். ஆசையையெல்லாம் மோசமாகச் செய்துவிட்டான். சென்னையில் வாசிக்கும் அவர் மகன் "ஹெலென்—சுந்தரம்" என்னும் ஓர் கிறிஸ்துவமாதை மணந்துகொள்ளும் பொருட்டு, அந்த மதத்தில் சேரப் போவதாகக் கடிதமெழுதிவிட்டான் விநாயகமூர்த்தியைத் "தகப்பன் சாமி" என்று வழங்கும் உலக வழக்கு இப்பொழுது நமக்கு நினைவிற்கு வருகிறது. நமது "ராவ்பகதூர்" ஒரு அடி தாண்டினால் அவர் மகன் ஒன்பது அடி தாண்டுவான்; தகப்பன் ஒன்பது என்று எண்ணினால் பிள்ளை ஐம்பது என்று முடித்துவிடுவான். அரை குறை ஆங்கிலம் படித்த நமது ராவ்பகதூரே ஆங்கில 'ரீதி'யாக நடிக்க விரும்பும்பொழுது, ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற அவர் மகன் 'அசல்' ஆங்கிலேயன் ஆக விரும்புவதில் என்ன தவறு இருக்கிறது? "மகான்கள் இருந்த ஹிந்து மதம்; எனது மூதாதையர்கள் தழுவிய ஹிந்துமதம்; எனது சொந்த ஹிந்துமதம்; இதை விட்டு ஐயோ! அந்த அந்நிய மதத்தில் சேரப்போகிறானே எனது மகன்" என்ற கவலையா நமது பிள்ளையவர்களுக்கு? இல்லை, இல்லை. சர்க்கார் "பூசாரிக"ளுக்கு பாதகாணிக்கையாக சொர்ண புஷ்பங்களை அள்ளியள்ளிக் கொடுத்ததில் தமது "பணப்பை" காலியாகி விட்டது; கடன் சுமை கழுத்தை நெருக்குகிறது. ஹரித்துவாரமங்கலம் காலஞ்சென்ற-முருகேசம் பிள்ளையின் மனைவியும், தனது உடன்பிறந்தாளும் ஆகிய கனகம்மாளின் ஏகபுத்திரி மீனாம்பாளைத் தனது மகனுக்கு மணஞ்செய்து வைத்து விட்டால், அவளுடைய அளப்பரிய 'ஆஸ்தி'க்கு தான் தலைவனாகிவிடலாம் என்ற அவர் நினைவு கனவாகிவிட்டது. ஆகவே அவர் தமது குமாரனுக்கு, "நீ அந்த மாதை மணந்துகொள்ளுதல் கூடாது; என் கருத்திற்கு மாறுபட்டு நடப்பதாயின், நமது மதத்தினரால் எங்ஙனம் நீ விலக்கி வைக்கப்படுவாயோ, அங்ஙனமே எனது குடும்பத்

163. எவர்கள் மீது குடும்பத்தலைவன் பிரீதி வைத்தானோ அவர்கள் தான் பிற்காலம் தெருவில் அலைவோராகிறார்கள்!

தினின்று முற்றிலும் ஒதுக்கப்படுவாய்; இங்கே உள்ள எல்லாப்பொருள்களின் உரிமையினின்றும் நீக்கப்படுவை" என அறிவித்திருந்தார். அதைக்குறித்து தான் துரைசாமி அன்று தன் தோழனிடம் பேசிக் கொண்டிருந்தான்.

அவன் தோழன் ஸ்ரீனிவாசன் ஆடம்பரமற்றவன்; நல்ல உழைப்பாளி; அவன் (ஸ்ரீனிவாசன்) கூறியதுபோல் அதிர்ஷ்டமோ துரதிர்ஷ்டமோ பி. ஏ. பரீக்ஷையில் தவறிவிட்டான். முழுதும் ஆங்கிலத்தையே கவனியாது, உபபாடமாகத் 'தமிழை' எடுத்துக்கொண்டு, அதற்குத் தன் காலத்தில் பெரும் பகுதியைச் செலவிட்டதனால்தான் இந்தத்தடவையில் பரீக்ஷையில் தவறிவிட்டான்" என்று துரைசாமி சொல்வதுண்டு. அது மெய்யோ பொய்யோ. மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும், "மெட்ரிகுலேஷன்" 'எப்—ஏ'' தனித் தமிழ்ப் பரீக்ஷைகளில் முதல்வனாகத் தேறிப் பரிசு பெற்றிருக்கிறான். துரைசாமி அந்த விஷயத்தில் 'பூஜ்யம்'. விநோலியா வொயிட்ரோஸ்சோப்பும், வெஸ்ட் அண்கோ வாட்சும், பி. ஆர். அண் சன்ஸ் வைரச் சங்கிலியும், ஒட்டோ தில்பஹார் சென்ட்டும் அவனுக்கு அழகு தருவன. ஆனால் ஆங்கிலத்தில் பி. ஏ.வில் முதல்வனாகத் தேறிவிட்டான்.

(தொடரும்.)

பெ. இராமாநுஜ ரெட்டியார்

தானமாகுமா? நம்மைப் போன்ற ஒரு சம்சாரிக்கு நாம் சிரார்த்த காலத்தில் தரும் தக்ஷிணை, அரிசி முதலியவைகள் உதவியும் கூலியும் ஆகுமேயன்றி அது ஒரு தானம் ஆகாது. பாமார்த்திக சிந்தையுடன் ஏகாங்கியாய் இருப்பவருக்கும், இல்லறத்திலிருந்து கொண்டு அவ்விதம் துறவு நிலை கொண்ட பெரியோர்க்கும் செய்வதே உத்தமமான தானமாகும். நம்மிடம் இப்போது தானம் பெற்றவருக்கு இந்த யோக்கியதையுண்டா?

## அன்பினரின் காட்சி.

தன் காரியம் கருதி வந்தபோதிலும் அந்த மனிதனின் முகம், அந்தக் காரியத்தைவிட நம்மையே விரும்பி வந்தவனாக அவனது களங்கமற்ற தன்மை காட்டுகிறது. அந்த முகத்தில் அன்பின் ஒளி நன்றாகத் தெரிகிறது. உத்தமன், சத்தியவந்தன் என்பதும் நமது நெஞ்சுக்குப் படுகிறது. உடனே அதே நிமிஷத்தில் அவனது அன்புக்கு அடிமையாகிறோம். அவன் கோரிவந்த காரியத்தையும் முடித்துக்கொடுக்கத் தயாராய் விடுகிறோம். வந்த மனிதனின் களங்கமற்ற அன்பு நிறைந்த உள்ளமானது நம்மை அடிமையாக்கி இவ்வளவும் செய்யவைக்கிறது.

164. அவன் பிரீதித்தவர்களுக்கு அவன் சொத்து சேராமல், அவன் துவேஷித்தவர்களுக்கே அது சொந்தமாவதை என்னென்றுகூறி

ரயில்வே ஸ்டேஷனில் ஐரோப்பிய—இந்திய ஸதிபதிகள்



(சித்திர விளக்கத்தைக் காண்க.)

165. நீ புத்திசாலியா? ஆயின் உடனே ஒரு 'லைப் இன்சூரன்ஸ் கம்பெனி" யில் சேர்.

# சித்திர விளக்கம்

ரயில்வே ஸ்டேஷனில் பல சமயங்களிலும் காண்கின்ற இந்திய—ஐரோப்பிய ஸதிபதிகளின் காட்சியை இந்த சித்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஐரோப்பியர்களுக்குத் தங்கள் சாமான்களைத் தாங்களே எடுத்துச் செல்வது ஒரு இளப்பமாகவும் கௌரவக் குறைவாகவும் படுகிறதில்லை. இங்கு ஒரு ஐரோப்பிய கனவான் தமது மனைவிக்கு சிரமம் கூடாதென்று எல்லா சாமான்களையும் தாமே எடுத்துக் கொண்டு தமது முன்பாக மனைவியை உல்லாஸமாகப் போகவிட்டுத் தாம் அவளுக்குப் பின்னால் செல்லுகிறார். இதைக் கேவலம் என்று அவர் நினைக்கவில்லை.

இந்திய கனவானோ எந்த ஒரு சாமானையும் தாம் எடுத்துச் செல்லுதல் பார்க்கப் பட்டவர்களுக்குக் கேவலமாகத் தோன்றும் என்று எண்ணப் பட்டவர். அந்த சாமானைத் தூக்கிவர ஒரு கூலியைத் தேடும் ஸ்வபாவமுள்ளவர். இங்கு ஒரு இந்திய கனவான் தாம் ஏதாவது ஒரு சாமானைத் தூக்கிச் சென்றால் அது அகௌரவம் என்றெண்ணி, எல்லாவற்றையும் தமது மனைவியே சுமந்து தம் பின்னால் வரும்படி உத்திரவிட்டுவிட்டுத் தாம் முன்னதாக ஒய்யார நடையுடன் போகிறார், அவருக்குப் பின்னால் தூக்க முடியாமல் திண்டாடிக் கொண்டு அவரது மனைவி போகிறாள்.

இருபாலாரும் பல சமயங்களில் தம் பெண்களை நடத்தும் மாதிரியை இந்த சித்திரம் விளக்குகின்றது. பெண்களைக் கொடுமையாய் நடத்தும் வழக்கம் படித்த இந்தியபுமான்களுள் இல்லையென்று ஒரே அடியாய்ச் சொல்லிவிடுவதற்கில்லை. மிகவும் படித்துத் தேறிய புள்ளிகள் தான் அதிக வரதக்ஷிணையையும், சாந்தி முகூர்த்தத்திற்கு வெட்கங் கெட்டுப் போய் அதிகப்படியான தொகையையும் கேட்கிறார்கள்! இது உண்டா?—இல்லையா? கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா? படித்தவர்களிற் பலர் பெண்களை ஹிம்ஸிக்கிற எமன்களா யிருக்கிறார்கள்! படித்த சிலர் மட்டுமே பெண்களுக்கு ஸமத்துவம் தந்து மிக்ககௌரவமாய் நடத்துகிறார்கள். இது நாளைக்கும் காணும் சங்கதி. மாமியின் கொடுமை புதிய செய்தியல்ல.

166. இறக்கும்போதுகூட அநேக வேலைகள் பாக்கி விழுகிறது. ஆதலின் இருக்கும்போதே எதையும் சரிவர நிறைவேற்று.

# * ஆங்கிலத் தமிழ்க் கடிதங்கள்

(*All Rights Reserved to the Author)

## Letter VI

### The Answer

*Honoured Mother,*

I am so much affected by the perusal of your really parental advice, that I can scarcely hold the pen to write an answer: but duty to the best of parents obliges me to make you easy in your mind, before I take any rest to myself. That levity so conspicuous in my former letters, is too true to be denied, nor do I desire to draw a veil over my own folly. No, madam, I freely confess it; but, with the greatest sincerity, I must at the same time declare that they were written in a careless manner, without considering the character of the person to whom they were addressed; I am fulty sensible of my error, and on all future occasions shall endeavour to avoid giving the least offence. The advice you sent me in your valuable letter, wants no encomiums; all that I desire is to have it engraven on my heart. My dear madam, I love religion, I love virtue, and I hope no consideration will ever lead me from those duties, in which alone I expect future happiness. Let me beg to hear from you often, and I hope that

## 6—ம் கடிதம்.

### அதற்கு உத்தரம்.

கனம் பொருந்திய தாயே!

தாயாகிய நீங்கள் எழுதிய உண்மையான புத்தியை வாசித்து எனக்கு உண்டாகிய மிகுந்த விசனத்தால் உத்தரம் எழுதக் கையில் இறகு பிடிப்பதெனக்கு அருமையாயிருந்தது. ஆகிலும் மஹா நல்ல தாயாகிய உங்கள் மட்டிலுள்ள கடமையானது எனக்கு ஓர் ஆற்றல் தேடிக்கொள்ளுமுன்னே உங்கள் மனதிலிருக்கும் சஞ்சலத்தை நீக்க என்னை உடன்படுத்துகின்றது. நான் முன் எழுதிய கடிதங்களில் விளங்கிய கவனமற்ற தன்மை மிகவும் நிச்சயமேயாதலால் நான் அதை இல்லை யென்னவும், என் புத்தியீனத்தை மறைக்க நினைக்கவும் மாட்டேன். இல்லையம்மா, நான் அதை உண்டென்றே சொல்லுகிறேன். அதேனெனில் நான் அந்தக் காகிதங்கள் எழுதியவர்கள் இன்னாரென்று ஆலோசிக்கும் எச்சரிக்கையற்ற விதமாய் எழுதிவிட்டதை உண்மையாகவே சொல்லுகிறேன். நான் செய்த குற்றம் எனக்கு நன்றாய்த் தெரிகின்றபடியால் இனி அற்ப மனக் குறையும் உண்டாகாதிருக்க எந்நாளும் பிரயாசைப்படுவேன். அருமையான உங்கள் காகிதத்தில் எனக்கு எழுதியனுப்பிய புத்தி மிகவும் புகழத்தக்கதா யிருக்கிறது. எனக்கு இருக்கும் ஆசையெல்லாம் அதை என் உள்ளத்திற் பதித்துக்கொள்ளுதற்கேதான். எனது அன்புள்ள அம்மா, பக்தியும் எனக்கு இஷ்டமே. நல்வழியும் இஷ்டமே. நான் இனி பேரின்பம் அடையக் காத்திருக்கும்

167. எதற்கும் ஒரு உயிலை முன்னதாக எழுதி ரிஜிஸ்டர் செய்துவை. திடீரென்று மரணம் நேரின் அது உன் குடும்பத்திற்கு உதவும்.

my whole future conduct will convince the best of parents, that I am what she wishes me to be.

I am honoured madam,
Your dutiful daughter
*Kamalavally.*

நல்வழிகளை விட்டு ஒரு நாளும் என்னை எதுவும் பிசகச் செய்யாதென்று நம்பியிருக்கிறேன். அடிக்கடி உங்கள் செய்தி எனக்கு எழுதப் பிரார்த்திக்கின்றேன். இனி என் நடக்கை முழுமையும் மஹா நல்ல தாயாகிய நீங்கள் விரும்புகின்றபடியிருக்கிறதென்று உங்களுக்குத் தெரிவிக்குமென்று நம்பியிருக்கிறேன்.

இப்படிக்கு,
கனம் பொருந்திய அம்மா,
வணக்கமுள்ள உங்கள் புத்திரியாகிய
கமலவல்லி.

---

வாரததில்தான் அவா:—மாணவர்கள் கவலையற்று உற்சாகமாய்த் தம் நண்பர்களோடு பேசி நிற்க, அவர்களின் விசாரமற்ற தன்மையை நோக்கி ஏக்கத்தில் மூழ்கியுள்ள சம்சாரி பெருமூச்சு விடுகிறான். மாணவர்களோ இவன் மனைவிமக்களோடு அழகாய் விளங்குவதைப் பார்த்துத் தாம் எப்போது அப்படி ஆவதோ என ஆவற்படுகின்றனர்.

## யோசனை.

ஒன்றுக்குச் சொல்லவேண்டிய திருத்த யோசனை அந்த சமயத்திற்கு மனதில் வரவில்லை. பிறகு சாமான்களை எடுத்து வைக்கும் வேலையில் இருக்கையில் சட்டென்று அந்த ஒருவிஷயத்துக்குச் சொல்லவேண்டிய யோசனை மனதில் படவும், உடனே வேலையாளை அழைத்து இன்னின்னபடி அந்த வேலையைச் செய்து முடி என்று சொல்லி யனுப்பினார். இதுபோலவே ஒரு கதாசிரியர் மூன்று வருஷமாக ஒரு கதைக்குத் தேடிக்கொண்டிருந்த ஒரு கற்பனா யோசனையை நாவிதனிடம் க்ஷவரம் செய்துகொண் டிருக்கும்போது நினைவிற்குப்பட்டுத் தெரிந்தவராகி சந்தோஷமுற்றார். நெஞ்சிற்கு இவ்வாறாக வந்து மறுபடியும் நினைக்கப்போகும்போது மறைந்துபோன யோசனைகள் எத்தனை எத்தனையோ?

---

168. செலவு செய்துகொண்டே இருந்தால் எந்த நாளில் நீ சேர்த்து வைக்கப் போகிறாய்?

# வீட்டுக் குட்டிக் கலகங்கள்

(314-ம் பக்கத் தொடர்ச்சி.)

“மாதா வயிறெரிய மகேசுவர பூஜை செய்வது” போலத் தனது அருமைத் தாய் தந்தையர் நடுத்தெருவில் நின்று தவிக்க, தன் மனைவியை மட்டும் தலையில் வைத்து ஆடுபவர் எத்தனை பெயர்? அவனே கடவுள்! அவன் மொழியே வேதம்! எனப் புருஷன் நினைத்து, தனக்கு ஆண்டவன் கொடுத்த பகுத்தறிவைச் சிறிதும் சிந்தியாது, அவன் சொல்வதைத் தட்டாமல் நிறைவேற்றுவதில் கண்ணுங் கருத்துமா யிருக்கிறான். அன்று ஊரில் அக்கிரமமாகச் சிலரிடத்து வம்பு வளர்த்துக்கொண்டு தன் மனைவி வந்திருப்பின்; சிறிதும் யோசனையின்றி உடனே தன் மனைவிக்குப் பக்கத்துணையாக வேஷ்டியை இறுக்கிக் கட்டிக்கொண்டு அவர்களோடு மல்லுக்குப் போகிறான். தன் குழந்தையைப் பக்கத்துவீட்டுச் சிறு குழந்தை அடித்து விட்டால், உடனே ஓடி அது அறியாப் பசுங் குழந்தை யென்பதையுங் கருதாது இரண்டு அடி அடித்து விடுகிறான். அதைக் கண்டு ஆத்திரமடைந்த அக் குழந்தையின் தாயார், “எப்படி என் பிள்ளையை அடிக்கலாம்?” என்று கேட்டுக்கொண்டிருக்கும் பொழுதே, அவளுக்குத் துணையாக அவள் புருஷனும், இவளுக்கு உதவியாக இவள் கணவனும், இன்னும் இவர்களைச் சேர்ந்த சிலரும், அவர்களுக்குவேண்டியவர்கள் சிலருமாக. “மது பிந்து கலகம்” போல் பிரமாதமாக சண்டை போட்டுக் கொள்ளுகிறார்கள். (மது பிந்து கலகம் என்பது—திண்ணையிற் சிதறிய தேன் துளியை ஒரு ஈ மொய்த்துக்கொண்டிருக்க, அந்த ஈயைப் பல்லியொன்று பிடித்து விழுங்க, பல்லியை அந்த வீட்டுப்பூனை ஓடிக்காலாற் பற்ற, எதிர் வீட்டு நாய் அந்த பூனையைக் கௌவிக்கொண்டது; அவ்வளவு தான்! “எப்படி உன் நாய் எனது பூனையைப் பிடிக்கலாம்?” என்ற பேச்சிலிருந்து இந்த வீட்டுக்காரரும் இவர்களைச் சேர்ந்தவர்களும், அந்த வீட்டுக்காரரும் அவர்களைச் சேர்ந்தவர்களுமாகக் கட்சி பிரிந்து பெரிய கலகம் விளைத்துக் கொண்டார்களாம்.)

***

குழந்தைகளுக்குள்ளும் பெரியவர்களுக்குள்ளும் நேரும் சச்சரவின் தாரதம்யத்தைப்பற்றி, மகாத்மாவின் குரு—ருஷ்ய மகான், டால்ஸ்டாய் அவர்கள் எழுதியுள்ள ஓர் கதையின் குறிப்பை ஈண்டுத் தருகிறேன்.—அன்று பெய்த கனத்த மழையினால், மழைநீர் ஓட வழியின்றித் தேங்கிக் கிடந்த ஓர் வீதியில் அவ்வூர்ச் சிறுமியர் இருவர் பறவைபோல் இங்கும் அங்கும் ஓடியாடித் திரிந்துகொண்டிருந்தனர். அவ்விருவரில் ஒருத்தி கீழே கிடந்த ஓர் குச்சியை எடுத்துத் தண்ணீரின்மேலே ஓங்கி வீசினாள். அதனால் அருகில் நின்றுகொண்டிருந்த மற்ற சிறுமியின் அழகிய, புதிய உடை சேறாகிவிட்டது. தன் உடை சேறானதைக்கண்டு, தன் தாய் அடிப்பாள் என்ற பயத்தினால் அச்சிறுமியை வைதுகொண்டே வீட்டிற்குப் போனாள். தற்செயலாக அங்கு வந்த அக்குழந்தையின் அன்னை விஷயம் அறிந்து, அதற்குக் காரணமான

---

169. உன் பல செலவுகளிலே—சேர்த்துவைப்பதையும்—ஒரு செலவின் பாகம் என்று எண்ணி, அதற்கும் கொஞ்சம் பணம் செலவிடு.

மற்ற சிறுமியை நான்கு ஐந்து அறை அறைந்து விட்டாள். அச்சிறுபெண் அதைப் பொறுக்கமுடியாது அலறிக் கொண்டு வீடு சென்றாள். இன்னும் விரிப்பானேன்? "ஜெர்மன் சண்டை" போலப் பிரமாதமான கலகம் மூண்டுவிட்டது. சில நிமிஷத்திற்கெல்லாம் அடிபெற்ற அச்சிறுமி மீண்டும் அந்த நீர்நிலைக்கு ஓடி, அங்கே கிடந்த கலகத்திற்குக் காரணமான அக்குச்சியை மறுபடியும் எடுத்து, மழை நீரைத் தேக்கிக்கொண்டிருக்கும் சிறு கரையை அக்குச்சியால் பெயர்த்து நீரை வெளியே ஓடும்படி செய்தாள். ஓடும் நீரில் ஓர் சிறு துரும்பைப் போட்டு, அது அசைந்து அசைந்து செல்லுங் காட்சியைக் கண்டு வியப்படைந்து அதைத் தடுக்கும் அங்கங்கேயுள்ள மேடுபள்ளங்களை சீர்திருத்திக்கொண்டே சென்றாள். மற்றசிறுமியும் அங்கே வந்து, அவளுடைய உழைப்பிற்குத் தானும் ஒத்தாசையாயிருந்து, தங்களுடைய, அழகிய சிறிய படகை (துரும்பை) கலகம் நடக்கும் கூட்டத்திற்குக் கொண்டுவந்து விட்டனர். அதைக் கண்ட ஒரு கிழவி, "ஓ! அறிவிலிகளே! இந்தச் சிறு குழந்தைகள் எவ்வளவு விரைவில், தங்கள் மனஸ்தாபத்தை மறந்து ஒன்றற்கொன்று அந்யோந்யமாக விளையாடிக் கொள்கின்றன; உங்களுக்கு அந்த அறிவில்லையே" என்று அங்கலாய்த்தாளாம்.

(அடுத்த ஸஞ்சிகையில் முடிவு.)

பெ. இராமாநுஜ ரெட்டியார்.

## தன் குற்றத்தைப் பிறர் மீது ஏற்றுதல்.

ஒருவன் மற்றொருவனைப் பார்த்து—"தங்கள் குணமும் மனதும் நடத்தையும் இவ்விதமெல்லாம் மாறும் என நினைத்ததில்லை"—என்கிறான். இவ்விதம் சொல்லுகிறவனோ ஐச்வரிய ஸம்பன்னன். இவன்தான் உண்மையில் மேற்கண்டபடி மாறிய மனுஷ்யனாகிவிட்டு, இவனுடைய அநுக்கிரகத்தை எதிர்பார்த்துக் காத்துள்ள ஏழையொருவனைப் பார்த்து மேற்கண்டவாறு கூறி, அந்த ஏழையே அவ்விதம் மாறிவிட்டது போல் பழியை அந்த ஏழை மீது வீசுகிறான். அந்த ஏழையோ, ஆகா! இவர்கள் இப்படி மனம் மாறிவிட்டார்களே யென்று ஏங்க, அந்த சமயம் இந்த ஏழையே மனம் மாறியது போலவும், தாங்கள் மனம் மாறவில்லை யென்பது போலவும் அந்தப் பணக்கார ஸீமான் பேசி தன்னைப் பேச்சில் சாமர்த்தியவானாகக் காண்பித்துக் கொள்கிறான். ஆனால் ஒன்று; மனுஷ்யனிடம் சாமர்த்திய வார்த்தைகள் பேசி சமாளித்துவிடலாம். எங்கும் நிறைந்த பரம்பொருளினிடத்தில் இந்த சமாளிப்பு செல்லாது. அவர்—மாறியது எவர்கள்—என்பதையெல்லாம் அறிந்து வைத்திருக்கிறார்.

170. உன் காலத்திற்குப் பிறகு நீ பிரிந்த மனைவி மக்களின் கதியென்ன? அவர்களுக்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறாய்?

## பெரியாரின் மொழிகள்

(322-ம் பக்கத் தொடர்ச்சி.)

158. Without justice we can have no guarantee of permanent peace. With justice the peace of the world is unassailable.

Courtneey.

நியாயமின்றி நிரந்தரமான உலக அமைதியை நாம் எதிர்பார்க்க முடியாது. நியாயமிருப்பின் உலகத்தின் அமைதி சீர் குலைக்க முடியாததாக ஆய்விடும். கூர்ட்னீ

159. The true workers work in silence and pass away in silence. Those who actually give up their lives for humanity are often times not known by many. Vivekananda.

உண்மையான கர்மயோகிகள் ரகசியத்திலேயே வேலை செய்து ரகசியத்திலேயே மறைந்துவிடுகின்றனர். மனித ஜாதியின் பொருட்டுத் தங்கள் உயிரையே தியாகம் செய்யும் மகான்களைப் பற்றிப் பலர் அறிவதுகூட இல்லை. விவேகாநந்தர்.

160. He who does not believe in himself is an at heist.

Vivekananda.

தன்னிலேயே நம்பிக்கை இல்லாதவன் ஒரு நாஸ்திகனேயாவான்.

விவேகாநந்தர்.

161. This world is no lovely flower garden, as some foolish people regard it. It is full of thorns and we must be very careful as we walk in it.

Paramananda.

சில மூடர்கள் நினைத்திருப்பதைப் போல இவ்வுலகம் சிருங்கார உத்தியான வனமல்ல; அது முட்கள் நிறைந்திருக்கிறது; அதில் நடக்கும் பொழுது நாம் வெகு ஜாக்கிரதையுடனிருக்கவேண்டும். பரமாநந்தர்.

162. Mankind's difficulties have been different in different placcs of the earth and in the manner of our over coming them lies our distinction.

Tagore.

உலகத்தின் வெவ்வேறு பாகங்களில் மனித ஜாதியின் கஷ்டங்கள் வெவ்வேறு விதமாக இருந்திருக்கின்றன. அவைகளைத் தாண்டிச் செல்லும் வழியிலேயே நம்முடைய தனி விசேஷங்கள் புலப்படுகின்றன.

டாகூர்.

163. An out-spoken heist is better than a hypocrite.

Vivekananda.

கபடமற்ற நாஸ்திகனொருவன் வஞ்சகனைவிட சிரேஷ்டமானவன்.

விவேகாநந்தர்.

164. Preferment goes by letter and affection. Shakespeare.

உத்தியோக உயர்வு சிபார்சுக் கடிதத்தாலும் பிரியத்தினாலுமே ஏற்படுகிறது. ஷேக்ஸ்பியர்.

165. Let your crown be of humility, your freedom the freedom of the soul.

உன்னுடைய தலைமுடி வணக்கமென்பதாக இருக்கட்டும்; உனது

171. குழந்தையை ஆசையோடு முத்தமிடுவது சரிதான். அவன் நாளைக்கு அநாதையாய்க் கண்கலங்காதிருக்க இப்போதே ஒரு வழி செய்துவை.

சுதந்திரம் ஆத்மாவின் சுதந்திரமாக இருக்கட்டும்.

166. O, speed the moment on
When Wrong shall cease, and
Liberty and Love
And Truth and Right throughout the world be known
As in theirhome above.

Whittier.

தவறு ஒழிந்து, சுதந்திரமும் அன்பும், ஸத்யமும், சரியானதும், மேலுலகில் இருப்பது போலவே இங்கும் இருக்கக் கூடிய நாள்சீக்கிரம் உதிக்கட்டுமாக. வால்டர்.

167. Good name in man and woman . . .
Is the immediate jewel of their souls. Shakespeare.

புருஷனிலும் ஸ்திரீயிலும் நல்ல பெயர் என்பதே அவருடைய ஆத்மாவின் நெருங்கிய பூஷணமாகும். ஷேக்ஸ் பியர்.

168. Good actions crown themselves with lasting bays,
Who well deserves, needs not another's praise. Heath.

நற்செய்கைகள் நிரந்தரமான அன்பையே தங்கள் முடிவாகக் கொள்கின்றன. நல்ல யோக்யதையை உடையவனுக்கு மற்றவனுடைய புகழ்ச்சி தேவை யில்லை.

ஹீத்.

169. The various expressions of the human countenance afford a beautiful and interesting study.

Dickens.

மனித முகத்தின் பலவேறுதோற்றங்களைப் பயில்வது ஒரு அழகும் ஆர்வமும் நிறைந்த படிப்பினையாகும்.

டிகன்ஸ்.

170. Nothing extenuate,
Nor set down aught in malice;
Shakespeare.

ஒன்றையும் மிகைப் படுத்திக் கூறுதே; விரோதத்துடனும்எதையும் சொல்லாதே. ஷேக்ஸ்பியர்.

(தொடரும்.)

R. இராம கிருஷ்ணன் பி. ஏ.

## வளர்த்த செடி

அவர் வெளியூர் சென்றிருக்கிறார். அவரிடம் உனக்கு உண்மையான அன்பு உண்டா? உண்டாயின், அவர் அருமையோடும் வளர்த்த செடிக்குக் காலம் தவறாமல் ஜலம் ஊற்றி அதைச் செம்மையாய்ப் பாதுகாத்து வா. அந்தச் செடி அவரது ஞாபகம். அது நல்ல நிலையிலிருக்கும் வரையில், போன இடத்தில் அவருக்கும் க்ஷேமம் உண்டு. அந்தச் செடியைப் பாழாக்கிக் காய்ந்து போகவிட்டு, அவர்மீது அன்பிருப்பதுபோல கடிதங்களை எழுதுவது மௌடீகமாகும். அது உன் போலியன்பையே குறிக்கும்.

172. பந்துக்களுக்கு நீ எழுதும் கடிதங்கள் பிறகு உன் குடும்பநாசத்திற்கு ஒரு பெரிய தஸ்தாவேஜி ஆகலாம்.

# பிரபஞ்ச விலாஸம்

1. இது எவ்வளவு காலம்?:— குடும்ப விஷயமான மனவருத்தத்தால் தாய் முகத்தைக் காணவும் மகன் சகிக்காமல் செல்லுகிறான். அவன் தாயோ அதற்குமேல் அவனை வெறுக்கிறாள். இது எவ்வளவு காலம்? திடீரென்று தாய்க்கு ஜுரம் கண்டுவிடுகிறது. அப்பொழுது வைத்தியர் வீட்டுக்குச் செல்ல முன்வருபவன் அந்த மகன்தான்! அல்லது மகனுக்கு ஏதாவது அசௌக்கிய மேற்பட்டுவிடுகிறது. அச்சமயம் மகா கவலையுடன் ஓத்தடம்போடவிரைந்து வருபவன் அத்தாய் தான்!

2. கடன் வரும்; சொல் திரும்புமா?:—கடன்காரன் கடனைக்கொடுக்கவில்லையே யென்று கடனுக்குடையவன் அக்கடன்காரனைக் காணாத விடமெல்லாம்—தனக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் கண்டபடி பேசி விடுவது சில ஆத்திரப் புத்தியினர்களின் சுபாவம். கடன் திரும்ப வந்து விடும். தாங்கள் பிரயோகித்த கடுஞ்சொற்கள் திரும்புமா வென்பதை நினைப்பதில்லை.

3. மந்த மதியினர்:—சிலர் தங்கள் குடும்ப இரகஸியங்களை யாரிடமும் திறந்து கூறிவிடுகின்றனர். அதனால் விளையும் தீமைகளை அவர்கள் உணர்வதில்லை. முதலாவது தங்களை அறிவீனரென்று விளக்கிவிடுகின்றனர். இரண்டாவது தங்கள் குடும்பத்தின் கௌரவத்தைக் குலைத்துக் கொள்ளுகின்றனர்.

4. இவர்களிடம் எச்சரிக்கை கொள்:—உன்னிடம் வெகு நேயம் பாராட்டி உன் எதிரியையோ, அல்லது வேறு எவரையோ தூஷித்து—அவர்களை இழிவாகப் பேசி—உன்னை மகிழச் செய்ய முயற்சிப்போரிடம் நீ நிரம்பவும் ஜாக்கிரதையுடன் நடந்து கொள்; மிகுந்த எச்சரிக்கையுடன் வார்த்தையாடு. ஏனெனில், இன்றைக்கு உன்னை மகிழச்செய்யவேண்டி யாரை நிந்தித்தார்களோ, அதே மனிதர்களுடன் நாளைக்குச் சேர்ந்து கொண்டு அவர்களை ஆனந்தப்படுத்த உன்னைத் தாழ்த்திப் பேசுவார்களென்பது முற்றிலும் உண்மை.

5. செய்கிறயா?:—அந்தக் காரியத்தைச் "செய்" என்பதிலும், "செய்கிறயா?" என்பது சிலாக்கியம். முன்னது ஒருசமயம் தடைப்படுத்தும். பின்னதோ வெற்றியே பெறும்.

6. கெஞ்சுகையில் மிஞ்சுதல்:— அவன் இவனைக் கெஞ்சுகிறவரையிலும் இவன் அவனை எதிர்க்கிறான். இவனை அலக்ஷியப்படுத்திய பின்போ இவனே அவனிடம் எளிய முகம் காட்டுகிறான்.

7. குணம்:—மிகப் படித்தவன் என்றளவில் அவன் பெரியமனிதனாய் விடுகிறதில்லை. அவனது குணம், சொல் முதலியவைகளைக்கொண்டே பெரிய மனிதனாகிறான்.

8. எஜமானனின் ஞாபகம்:— வேலையாள் தனது வேலை நேரத்தை விட அதிக நேரம் வேலை செய்து விட்டுப் பிறகு வீட்டுக்குப்போனது மாத்திரம் எஜமானனின் புத்தியில் படுகிறதில்லை. வேலையாள் கேட்டுக் கொண்ட ரஜாவின்மேல் ஒருநாள் சீக்கிரம் போகச்சொன்னது மாத்திரம் ஞாபகத்திலிருக்கிறது!

173. அதிகமான விவகார ஞானம் படைத்தவர்களின் குடும்பமே பிறகு தெருவில் அலைகிறது.

9. சகோதர பாசம் :—நேற்று அக்காவும் தம்பியும் தலை போகும்படியாகச் சண்டை போட்டுக்கொண்டார்கள். இன்றே தம்பியின் பக்கமாகச் சலுகை பேச அக்கா புறப்பட்டுக் கொள்கிறான். தம்பியும் தான் வாங்கி வந்ததை அக்கா முன்பு காட்டி அது நன்றாயிருக்கிறதா என்கிறான்.

10. இதை யார் கேட்டார்கள்?:—நடுவழியில் சந்தித்த தன் நண்பனிடம்—"வண்டி எதுவும் அகப்படவில்லை—அதனால் நடந்துவர நேர்ந்தது" என்கிறான். இவன் நடந்து வந்ததைப்பற்றி யார் கேட்டார்கள் ?

11. எங்கு சென்றனே?:—ஒருவனைப்பற்றி மனதில் புகைந்துகொண்டிருக்கும் வேளையில், அந்த ஒருவனை எங்கே யென்று எவராவது கேட்க வந்தால், அவன் போன இடம் தெரிந்திருந்தாலுங்கூட அதை மூடிவிட்டு "அவன் எங்கு சென்றானோ—அவன் போகும்போது என்னிடம் சொல்லிக்கொண்டா போகிறான்" என்று வெடுவெடுப்புடன் பதில் சொல்லுகிறார்கள். இதில் என்னபெருமையோ? அவன்மீதுள்ள கோபத்தை-அவனை விசாரிப்போரிடம்காட்டுகிறார்களோ?

T. S. குழந்தைவேல் முதலியார்.

## கடவுள் இருக்கிறார் காக்க !

அதுதான் ஒரு ஏழையின் முடிவான தீர்மானம். **கடவுள் நம்மைக் கைவிடார்** என்று ஒரு உழைப்பாளி உறுதியான எண்ணங்கொண்டு ஒரு தொழிலை ஆரம்பிக்கிறான். அந்தத் தெய்வ நம்பிக்கை அவனைக் காப்பாற்றி விடுகிறது. அந்த ஏழை நம்பியிருந்த ஒரு இடம் அந்த ஏழையைக் கைவிட்டுவிடும்படியாகும்போது, பாவம் அந்த ஏழை மனுஷ்யன் அது சமயம் மிகுந்த கலக்கத்துடன் பெருமூச்சு விடுகிறான். அவனுடைய தெய்வ நம்பிக்கை உடனே அவனுக்கு மற்றொரு இடத்தைக் காண்பித்து, 'அடே! பயப்படாதே, தைரியமாயிரு' என்று அவனைத் தேற்றுவிக்கின்றது. அவனும் மனது தேறி '**கடவுள் இருக்கிறார் காக்க**' என்று சொல்லித் தன் கண்ணீரைத் துடைத்துக்கொள்கிறான். நம்பிய மனிதர்கள் கைவிட்டாலும் கடவுள் கைவிடார். **ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு புதிய மனுஷ்யரைக் கடவுள் நமது உதவிக்குக் கொண்டுவந்து கொடுத்தபடியே இருக்கிறார்.** அவர் பாதம் துணை.

174. முனிசிபல் கௌன்சிலர், சேர்மன் போன்ற கௌரவ ஸ்தானங்கள் குடும்ப சொத்தை வெகுவாய் அழித்துவிடுகிறது.

# சென்றமாதம்

போந்தது புதிய எண்ணம் !
பொலிந்தது வீரம் எங்கும் !
தீர்ந்தது தொழும்புப் புத்தி !
செழித்தது நாட்டில் அன்பு !
தேய்ந்தது பகைவர் துள்ளல் !
திருவெலாம் சேர்த்தான் காந்தி !
காந்தியின் வழியை நெஞ்சே !
கணந்தோறும் பாடு கண்டாய் !

பாரத நாட்டு நலனுயர் பெருமான் மகாத்மா காந்தி சென்ற மாதம் தமிழகம் பூரித்திட நமது பக்கத்திற்கு வந்து சென்றார். அன்பே அருளாய், அருளே உருவாய், அடக்கமே அணியாய் வெற்றி படைத்த மாதவ மணியே ! திருவளர்ந்தோங்கும் திறலுயர் முனிவ ! சாந்தி தரும் காந்தி யெனு மா பெரியோய் ! தமிழ் மக்களாமெங்கட்குப் பக்குவச்சேவை பாலித்திடப் . போந்த கீர்த்தி புனை கோர்த்தி மிகு பார்த்திப ! தெரிசனத்தில் மயல் விளைத்த திவ்ய நாயகமே! தங்களின் நல்வரவால் நாங்கள் புனிதர்களானோம். தென்னிந்தியா எனும் இச் செந்தமிழ் நாட்டில் வழங்கும் தமிழ் பாஷை மிக மிக இனியது. தமிழர்தம் வீரம் பண்டை நாள் முதலாய் பார் எங்கணும் பரவிய கீர்த்தி கொண்டது. தமிழ் மக்களே தென்னாப்பிரிக்காவில் தங்களுக்குப் பாத சேவை புரிந்த பாக்கிய சம்பன்னராவர். உலக சிரேஷ்டராகிய மஹாத்மா தமிழ் மக்களை அறிந்திருக்கின்றார் என்பது எங்கட்கு மஹா பெருமை. தமிழ் மக்களுடன் அவர் கலந்து பழக வந்தமை எங்களின் வாழ்வுக்கெல்லாம் பெரியதோர் கீர்த்தி. மஹாத்மாவின் ஜீவிய காலத்தில் நாங்கள் வாழ்வு பூண்டிருப்பது பெறுதற்கரியதோர் பாக்கியம். மஹாத்மாவை நேரில் கண்டு தரிசிக்கவும், அவரது மகத்தாய உபதேசங்களைக் கேட்கவும் ஆ ! எத்துணைப் பாக்கியம் செய்திருந்தோம். தேவரீரது தெரிசன விசேஷமே எங்களின் ஜன்ம சாபல்யம். உலகுக்கே தாங்கள் ஒருவர்தான் தற்போது மஹாத்மாவாய், அஹிம்ஸா தர்மப் பெரியோராய் சிரேஷ்டாசனத்தில் இலங்கிடும் சம்பிரம மேன்மையாளர் ஆவீர்கள். கருணையங்கடலே ! கதரின் அரசே ! வறுமை தவிர்த்திட ராட்டினங் காட்டிடும் வள்ளலே ! எங்களின் வாழ்வையும் நோக்கையும் உயர்தரமுடையதாக்குவீர். எங்களின் அலைத்திரள்வுள்ளம் கதர் ஒன்றிலேயே நிலைத்து வெள்ளமெனப் பெருகிட ஆசீர்வதித்திடுவீர்.

வாழ்கநீ எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்மா ! நீவாழ்க வாழ்க.

வந்தேமாதரம்.

***

175. முன்னுக்கு வர விரும்பினல் சம்பளத்துக்... ...ன் பட விரும்பினல் கௌரவஸ்தானங்க...

தமிழ்... நூலகம்
169829

**ஹிந்து—முஸ்லிம் ஐக்கியத்திற்கான பொன்னுரைகள்.**

திரிச்சிராப்பள்ளியில் கூடிய மஜ்லிசுல் உலமா காலாவது மஹாநாட்டில் அக்ராஸனம் வகித்த மௌலானா சையத் சுலேமான் நத்வி அவர்கள் ஹிந்து—முஸ்லிம் ஐக்கியம் பெருகும்வண்ணமாய்ப் பலஉபதேசங்கள் புரிந்தார். அந்த அமிர்த மொழிகளின் சாரத்தை இங்கு தருகிறோம்:—

1. "பஞ்சாப்பிலுள்ள ஹிந்துக்களைவிட சென்னை ஹிந்துக்கள் மதப்பற்றில் சற்றும் குறைந்தவர்களாக இல்லாவிட்டாலும், அவர்கள் தங்கள் முஸ்லிம் ஸகோதரர்களுடன் சமரஸமாக வாழ்ந்து வருகின்றனர்."
2. "துவேஷத்தை உண்டாக்குவது நாட்டிற்கோ அல்லது ஹிந்து முஸ்லிம்களில் எச்சமூகத்தினருக்கோ நன்மையை விளைவிக்கப் போவதில்லை."
3. "முஸ்லிம்கள் ஹிந்து புராணங்களையும், ஹிந்துக்கள் திருக்குர் ஆனையும் படிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் ஒருவருக்கொருவர் பிறரது மனோபாவத்தைத் தெரிந்து கொள்ளலாம்."
4. "எறும்புக்குத் துன்பம் செய்வதுகூடப் பாவம் என்று இஸ்லாம் போதிக்கின்றது."
5. "கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவன்களுள் அழகியதாக இருக்கும் மனிதனிடம்** அன்புக் குறைவாக நடக்கும்படி இஸ்லாம் கூறவில்லை."

***

**மத தூஷணைத் தடுப்பு மசோதா சட்டமாக நிறைவேறியதில் ஜனநன்மையில்லை.**

மத நிந்தனைத் தடுப்புச் சட்டம் ஸமூகத்திற்கு எவ்வித நன்மையுமில்லை. நலத்தை விடத் தீமையே மிகுதி. ஜனசுதந்தரத்தின் ஒரு பல் பிடுங்கப்பட்டது போலாம். அரசினருக்கு மற்றொரு அடக்குமுறை ஆயுதம் இவ்வழியில் கிடைத்ததானது அவர்களுக்கு ஒரு லாபம். ஜனங்களுக்கோ உள்ள சுதந்திரம் ஒரு படி குறைந்துவிட்ட நஷ்டம். ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற் சேர்க்கும் காரியம் தொலைந்திடும் வரையில் மத தூஷணை ஓய்ந்து விடுமென்று சொல்லிவிடுவதற்கில்லை.

## காதலனின் பிரிவு.

என் பூர்ணேந்திரா! அறம், பொருள், இன்பம், வீடு— என்றறைந்திடும் நால்வழிக்கு முறைபடு மில்லாள் உன் நயனதாரா. பொறையினிற் பூமி போன்றாள். புகழுடைக் கற்பின் மிக்காள். குமுதவாய் மலரால் திருத்தமாக நாதா வென்றும், துரை யென்றும், நண்ப வென்றும், ராஜா வென்றும் நவின்ற செல்வி. அவ்வுயர் அணங்கின் காதலெனும் பெருந்தளையிற் கட்டுண்டு களிபொங்கி நின்றாய் ஓர் காலந்தன்னில்—ஆனால்——இப்போதோ! (ஆ. க. க.)

176. எழுதுவது வெளிக்கு வெகு வெகு பக்ஷமான கடிதம். உள்ளுக்கோ அவ்வளவும் சுயநலத்தன்மையான வியாபார எண்ணம்.

# திருக்குற்றால நீர்வீழ்ச்சி

மனிதனது ஆராய்ச்சித் திறத்தினாலும் ஆற்றலினாலும் அமைக்கப்பட்ட செயற்கைக் காட்சிகளைவிட ஆண்டவனது எல்லையற்றஅற்புதசக்தியினால் தானே அமைந்து விளங்கும் இயற்கைக் காட்சிகளேசிறந்த அழகுடையனவாம். இயற்கைக்காட்சிகளைக் கூர்ந்துநோக்குந்தோறும் அவற்றைப்பற்றிச் சிந்திக்குந்தோறும்,புதுப்புது உணர்ச்சிகள் உள்ளத்தெழுந்து இன்பமூட்டா நிற்கும். இயற்கைக் காட்சிகள் பாவாணர்க்கு இன்ப மூட்டுவதுபோல, செயற்கைக் காட்சிகள் ஊட்டா. இயற்கைக் காட்சிகளைக் காணுந்தோறும். அவற்றைப் படைத்த கடவுளின் நினைவு உள்ளத்தில் உதித்து, அவ்வுள்ளத்தை இன்பக் கடலாடச் செய்யும்.

'திருக்குற்றாலம்' எனப்படுவது தேவாரம் பெற்ற பாண்டிய நாட்டுச் சிவ ஸ்தலங்களுள் ஒன்றாகும். அஃது ஒருகாலத்தில் சிறந்ததொரு விஷ்ணு ஆலயமாக இருந்தது. தமது சைவத் திருக்கோலத்துடன் அத்திருக்கோயிலினுட் புகமுயன்ற அகத்திய முனிவரை, அங்கிருந்த வைணவப் பிராமணர்கள் கடிந்தனுப்பியதால் அம்முனிவர் வைணவக் கோலத்துடன் மீண்டு வந்து ஆலயம் சேர்ந்து 'குறுக, குறுக, குற்றாலா' என்று கூறி, திருமாலின் விக்கிரகத்தை சிவலிங்கமாக்கி விட்டா ரென்பது புராணக் கதை.

அத்திருக்கோயி லருகிலிருக்கும் மலையின் உச்சியிலிருந்து, ஓர் அழகிய அருவி வெகு வேகமாக வீழ்ந்தோடுகின்றது. அதனைச் சுற்றிலும் உள்ள மலைகளில் பச்சைப் பசேலெனச் செழித்து வளர்ந்து பலவகை மலர்களோடு விளங்கும் மரங்கள் பல கண்களுக்குப் பெரு விருந்தளிப்பனவாம். தனது குட்டிகளோடு தாவித் தாவி அம்மரங்களில் விளையாடும் குரங்குகளும், உல்லாஸமாகப் பாடிப் பறந்து திரியும் குருவிகளும் உள்ளத்திற்குப் பேருவகை ஊட்டுகின்றன. மலைச்சாரலிலிருந்து தவழ்ந்து வந்து மெல்லென வீசும் இனிய தென்றற்காற்றை அனுபவித்துக் கொண்டும், குன்றங்களின் இயற்கையைக் கூர்ந்து நோக்கிக்கொண்டும் ஒருவன் அவ்வருவியினருகில் சற்று அமர்ந்திருப்பானாயின், அவனது மனம் அடையும் ஆனந்தத்திற்கு அளவில்லை.

அத்தகைய குற்றாலத்தின் இயற்கைக் காட்சிகளின் பேரெழிலை திரிகூடராசப்ப கவிராயர் எனும் சிறந்த புலவரொருவர் பண்சுமந்து அழகு சுமந்து இன்பஞ் சுமந்து நகர்ந்தும் ஓடியும் துள்ளியும் செல்லும் தமது 'குறத்திப் பாட்டு'களில் படம் பிடித்ததேபோல விளக்கிக் காட்டுகின்றார். அவற்றுட் சில வருமாறு:—

"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்,
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்,
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பார்,
கவனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்,

தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்,
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்,
கூனல் இளம்பிறை முடித்த வேணியலங்காரர்,
குற்றாலத்திரிகூட மலையெங்கள் மலையே."

"முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்,
முற்றமெங்கும் பரந்தடெண்கள் சிற்றிலைக்கொண்டோடும்,
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்,
கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை யிடிப்போம்,
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்,
தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்,
வழங்குகொடை மகராசர் குறும்பலவில் ஈசர்
வளம்பெருகும் திரிகூட மலையெங்கள் மலையே."

மற்றும், மலைச்சாரலா யிருத்தலாலும், எப்பொழுதும் நல்ல காற்று வீசிக்கொண்டிருப்பதாலும், செழிப்பு மிக்க மரங்கள் பல அடர்ந்து வளர்ந்திருத்தலாலும் அத்திருக்குற்றாலத்தில் வெய்யிலின் கொடுமையே தோன்றுவதில்லை. இருந்தாற் போலிருந்து திடீரென்று மேகங்கள் திரண்டு இருண்டு சிறு தூறலாகத் தூறும். மலையிலிருந்து கீழேவிழும் அவ்வருவியிற் சென்று சற்றே நிற்போமாயின், மிக்க உரமாக நம்மீது விழும் அவ்வீழ்ச்சியின் அடிகள் உடலுக்கு நல்ல வலிவைத் தருவனவா யிருத்தலோடு உள்ளத்திற்கும் பேருவகை யூட்டுவனவா யிருக்கின்றன. எவ்வளவு நேரம் அவ்வருவியில் அவ்வடிகளைத் தாங்கிக்கொண்டே நிற்போமாயினும், அவ்விடத்தை விட்டுவிட்டு வர மனம் ஒப்புவதேயில்லை. எவ்வளவு நேரம் நீராடினும் ஆவலும் அடங்குவதில்லை.

அ. வ. பதுமநாப பிள்ளை.

## ஈனமான நினைப்பினன்.

நம்மைப்பற்றி—'இவன் என்ன ஒரு கேவலமான மனிதன், இவன் நமக்கு ஒரு நிகரா' என்று அகங்கரித்துத் தாழ்வான எண்ணங் கொள்பவர்கள் சிலர் உண்டு. அத்தகையோர் நம்மை அலக்ஷியமாய் எடுத்தெறிந்து பேசுவர், நம்முன்பாகத் தம்மைப் பெருமைப்படுத்திக்கொள்வர். அத்தகைய ஈனமான நினைப்பினனின் முன்னதாக நாம் எதிர்ப்படாமலே இருந்துவிடுவதுதான் மேல். அந்த ஈன நாய் நம்மைப் பார்த்துக் குலைக்கவும்வேண்டாம், அதற்கு நாம் பதில் சொல்லி விரோதப்படவும் வேண்டாம். மேலும் அந்த நாய்க்கு அவ்வித ஈனநினைப்பு உண்டாகாதபடி நாம் அவன் கண்ணெதிரில் படாமலிருப்பதே அவனுக்கு நாம் செய்யும் உதவி. அது நமக்கும் நன்மை.

| | | |
|---|---|---|
| விவேகம்<br>விநோதம்<br>விசித்திரம்<br>விகடம் | விகடப் பிரதாபன்<br>(Registered.) | அநுபவம்<br>அற்புதம்<br>ஆச்சரியம்<br>ஆநந்தம் |

# ஆ! தீபாவளியே!! தப்புத்தாளமே!!!



வருகைக்குக் காக்கவைத்த பிரபவ வருஷமும் வந்து புகுந்து பழகிய பழைய பெண்ணாய் விட்டது! வசந்த உத்ஸவங்கள் ஒழிந்தன! ஆடி மாசத்து அம்மன் திருவிழாக்கள் ஆயின! காகமெடுக்கும் ஆர்ப்பாட்டங்கள் போயின! ஆவணி சிராவணம் கடந்தன! புது பூணூல் தோள் மேலேறின! செத்தவர் கெட்டவர்களுக்கு மஹாளய அமாவாசை கும்பிட்டும் முடிந்தன! புரட்டாசி சனிக்கிழமைகளும் தாண்டின! அந்த சனிக்கிழமைகளின் பேயோட்டங்களும் தொலைந்தன! ஆயுத பூஜை, ஸரஸ்வதி பூஜை, நவராத்திரிகளும் விடைபெற்றுக்கொண்டன! இனிமேல் தானப்பா இருக்கிறது — பெரிய செலவோடுங் கூடிய பெரிய திருவிழா! அது இன்னதென்று விகடன் என் நஞ்சான் குஞ்சான்களுக்குச் சொல்லித் தெரியவேண்டாம்! முளைத்து மூன்று இலை புறப்படுவதற்கு முன்பே புருஷன்—பெண்ஜாதி விவரங்கள்பேசத் தெரிந்து போயிருக்கிற இந்த நாளைய கண்டுகுண்டுகள் விகடனுக்கே பாடம் சொல்லித் தரக்கூடியவர்கள்! அவ்வளவு முற்றினவர்களுக்கு முன்னே ஐப்பசி பஞ்சாங்கத்திலே தீபாவளி யென்றால், இது கூடவா தெரியாது என்று கைகொட்டிச் சிரிப்பார்கள்! சிரிக்கிற சிரிப்பிலே முக்கியத்தை விட்டுவிட்டு மறந்துபோன சங்கதிகள் எவ்வளவோ இருக்கின்றன. அலக்ஷியப்படுத்துவதிலே அருமையான பல சங்கதிகளும் கருத்துகளும் பண்டங்களும் ஆச நேச விஸ்வாச அபிமானங்களும் விட்டுப்போகின்றன. தெரியும் என்ற சங்கதியிலே தான் தெரியாத—தெளியாத சங்கதிகள் அநந்த முண்டு. ஆகவே, விகடன் பேசவந்த தீபாவளி கதையிலும் சிந்தனைக்கான சரக்குகள் சில சிந்திக் கிடக்காமலில்லை.

***

தீபாவளி புராணம் போன வருஷம் விகடன் படித்துவிட்டேன். இப்போதைக்கு அதிலே கலந்துள்ள

தப்பக் தானக்காரர்களை'த் தடிகொண்டு புடைக்கப் புறப்படுகிறேன். யார் அப்பா அவர்கள்? எந்த ஊர்? எந்த தேசம்? எந்த நாடு? எந்த சீமை? எந்த பூமி? எங்கு வந்தார்கள்? ஏன் வந்தார்கள்? கடல் வழியா? தரை வழியா? எவ்விதம் வந்தார்கள்? வந்த வயணமென்ன? வரவேண்டிய காரணமென்ன—என்பீர்களோ? அவர்கள் புதிதாக வரவுமில்லை — வந்துபோகவுமில்லை. எங்கும் எந்தப் பதியிலும், எந்த நாட்டிலும் எப்பொழுதுமே சாஸ்வதமாய் வீட்டு மாமன்களைப் போல மண்டிபோட்டு உட்கார்ந் திருப்பவர்களே தான்! தப்புத்தானம் கொட்டாத இடம்—உலகம்—பண்டிகை—கொண்டாட்டம்—மதம்—இசை வசை—பூசைகள் எங்கே யிருக்கிறது? இந்தத் தப்புத் தானக்காரர்கள் இல்லாத சங்கதி ஒன்றேனும் அகப்படாதாவென்று விகடன் சல்லடை போட்டுச் சலித்தும் பார்த்தேன். அவர்கள் இல்லாத இடம் இல்லவே யில்லை. பிறப்பு முதல் இறப்பு வரையிலும், ஒளி முதல் இருள் வரையிலும், கொண்டாட்டம் முதல் திண்டாட்டம் வரையிலும், அரண்மனை முதல் குச்சு வீடு வரையிலும் அவர்கள் நிறைந்திருக்கிறார்கள்! வெகு தொலைவிற்குப் போகவேண்டாம். கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா என்பதுபோல, நமக்குள் இருக்கிற அரிப்பை நாமே எடுத்துச் சொரிந்து கொண்டால் போதாதா? இப்போதைக்கு நமக்கு முன்னே எதிர்ப்பட்டுக் கொண்டு இனி வருவதற்கிருக்கிற தீபாவளியையே முதலில் எடுத்துக் கொள்வோம். அட அதிசயமே! இதில் எவ்வளவு தப்புத் தானக் காரர்களப்பா!

முதல் முதலிலேயே விவாகத்திற்கு அடிபோடுகையிலேயே தீபாவளி சீர் என்னென்ன செய்வீர்கள் என்ற கேள்வி புறப்பட்டுக் கொள்ளுகிறது! இதிலே உள்ளது சொல்லி உண்மை வழிப்படிப் போகிறவர்களின் சரக்கு ஒரு பக்கம் இருக்க, சிலர் ஏமாறவைத்துக் காரியத்தை முடிப்பதற்காக—அந்த சீர் இந்த சீர் எல்லாம் செய்வோம் என்று சொல்லித் தப்புத் தானம் கொட்டிக் கடைசியில் ஒன்றுமே செய்யாமற்போகிறார்கள்! இது பின்னுக்குப் பெரிய மனஸ்தாபங்களில் முடிந்து விடுகிறது! காலமுழுதுக்கும் ஒரு வசைப் பேச்சாகவும் நின்று சொல்கிறது. தீபாவளிக்கு என்னென்ன எடுக்கப்போகிறீர்கள் என்று பெண்டாட்டி கேட்கிறாள். அதற்கென்ன வேண்டியது செய்வோமென்று தன் உள் நெஞ்சை மறைத்துக்கொண்டு வீட்டுக்காரன் வேண்டிய தப்புத்தானம் கொட்டுகிறான்! அப்படிக் கொட்டாவிட்டால் அன்றைய சாப்பாடு கூப்பாடாகிவிடுமென்ற ரகசியம் அவனுக்குத் தெரியும். இவ்விதமே குழந்தை குட்டிகளும், தீபாவளிக்கு வீட்டுக்கு வந்திருக்கிற பெண்ணும் கேட்க, அதற்கெல்லாம் வேண்டிய தப்புத்தானம் கொட்டுகிறான். அவர்களுக்கு சேலை எடுக்கவேண்டும்—இவர்களுக்கு சேலை எடுக்கவேண்டும் என்று சொல்லி அந்த சமயத்திற்குப் பல்லிளிக்க வைக்கிற தப்புத்தானங்கள் வேறே! இவைகளுக்கெல்லாம் மேலாக இத்தனையும் வாங்கப்போகிற ஜவுளிகடைகளிலும், வீடுகளின் பக்கம்வந்து விற்கிறவர்களிடமும் புறப்படுகிற தப்புத் தானங்களோ எண்ணி முடியாது! பணத்தைப் பெற்றுக்கொண்டு துணிகளைக் கொடுக்கிறவகையிலே அவற்றை ஆசீர்வதித்துக் கொடுக்கிற தப்புத்தானங்கள் பலே பலே மயக்குத் தந்திரங்களாக்கும்!



***

இனி, இந்தத் தீபாவளி செலவுகளுக்கெல்லாம் எவ்வெவ்விதமாக வழி செய்கிறதென்று யோசிக்கிற அந்தந்த வீட்டுப் புருஷர்கள் பணம் திரட்டுவதற்காகச் செய்கிற தப்புத் தானங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தினுசாய் இருக்கும்! பணம் கேட்க வந்தவனுக்குத் தர மனதுஇல்லாதவன் சொல்லுகிற சாக்கு போக்குத் தப்புத் தானங்கள் வெகு சோக்கிலிருக்கும். தையற்காரன் எல்லோருக்குமே நாளைக்குத் தைத்துத் தந்துவிடுவதாகத் தப்புத் தானம் கொட்டுவான். மளிகைக் கடைக்காரன் அந்த சமயத்தில்தான் விலைகளை ஏற்றி உதவாத பூச்சிகள் பிடித்து உதிர்ந்த வெல்லத்தையெல்லாம் வெகு அழகு செய்து வெகு நல்ல சரக்கு என்று பெரிய பெரிய தப்புத் தானங் கொட்டுவான். இப்படியே எண்ணெய்க் கடைக்காரனின் தப்புத் தானம், அரிசி வியாபாரிகளின் தப்புத் தானம், புதிதாக வந்த சரக்கு என்று சொல்லி மயக்குகிற பட்டாசு வாணக் கடைக்காரர்களின் தப்புத்தானம், இவற்றைச் சுடத்தெரியாத குழந்தைகளிடமிருந்து பிடுங்கித் தாங்கள் சுட்டுக் காண்பிப்பதாகச் சொல்லுகிற மற்ற சிறுவர்களின் தப்புத் தானம், தீபாவளி சமயத்தில் ஏதாவது வரப் பற்றிக் கொள்ளவேண்டுமென்று கெஞ்சின முகமாய் அடிக்கடி வந்து போகிறவர்களின் தப்புத் தானம், அந்த நல்ல நாளில் துணிகள் வாங்குவதிலே தங்களுக்கும் பங்கு இருக்கட்டுமென்று அங்கேவந்து குந்திக்கொள்கிறவர்களின் தப்புத் தானம், தீபாவளிக்கு ஏதாவது செய்யானா, வாங்கித் தானாவென்று அவனவனைச் சுற்றிக் கொண்டிருப்பவர்கள் போடுகிற தப்புத் தானம், எவ்வளவு செய்தாலும் திருப்தி காண்பித்துக் கொள்ளக் கூடாதென்று நினைத்து முகத்தைக் கோணவே வைத்து நிற்பவர்கள் போடுகிற தப்புத்தானம், கசாப்புக் கடைக்காரர்களின் தப்புத்தானம், மதுபானக் கடைகளின் தப்புத்தானம், நெய்யோடு எண்ணெய் கலந்துவிட்டுச் செய்யும் மிட்டாய்க் கடைக்காரர்களின் தப்புத் தானம், நூறு ரூபா நகைக்கு முப்பது ரூபாய்தான் தர முடியுமென்கிற பாங்கிகளின் தப்புத் தானம், தீபாவளி அவசரத்தில் விற்கப் போன நகைகளுக்கு மாற்றைக் குறைத்துப் பேசுகிற நகை சாப்புக் கடைகளின் தப்புத்தானம், தீபாவளிக்குள் நகை செய்து தந்துவிடுவதாகச் சொல்லும் தட்டார்களின் தப்புத் தானம்,—இப்படி எவ்வளவோ தப்புத் தானக்காரர்களைச் சொல்லலாம்!

***

புருஷன் போனபிறகு அவன் சொத்துக்களை யெல்லாம் சுருட்டிக் கொண்டு தாய் வீடு வந்த பெண், தனக்குத் துணையாயிருந்த அண்ணன் தம்பி முதலியவர்களை யெல்லாம் ஒதுக்கிவிட்டு, வேறொரு அன்னிய பந்துவை வேண்டியவனாகக்கொண்டு அவனுக்கே எல்லா சொத்துக்களையும் கொடுத்து, அந்தரங்கத்தில் தன்னையும் கொடுத்துக் கடைசியில் இந்த தீபாவளியிலே கணவன் போன விசனத்தைக் காண்பித்துக்கொண்டு அன்றைக்கு எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யாமல் மஹாபதிவிரதையாகத் தப்புத்தானம் கொட்டுகிறாள்! உயிருடன் இருந்தபோது கஞ்சிக்குக்

காற்றாகப் பறக்கவிட்டு, செத்த பின்பு பொடியைப் போட்டு) ஒரு பக்கத்து மூக்குச் சளியைச் சிந்தி உதறிவிட்டு மனைவிமக்களோடு சந்தோஷமாயிருந்தவன்—இறந்தவர்கள் பொருட்டு இந்தவருஷம் தனக்குத் தீபாவளி யில்லையென்று ஒரு தப்புத் தாளம் கொட்டுகிறான்! மாண்டுமண்ணான தன் சகோதரனின் சொத்துக்களை யெல்லாம் வசப்பற்றிக்கொண்டு அவனதுமனைவி மக்களைத் தெருவில் அலையவிட்டுவிட்ட விசுவாசக்காரனும் தன் சகோதரனின் மரணத்துக்காகத் தீபாவளி கிடையாதெனத் தப்புத்தாளம் போடுகிறான்! இது என்ன இரக்க உருக்கத் தானமோ!

* * *

கணவனைப்பறிகொடுத்து வந்துள்ள பெண்ணின் முன்பாக அப்பனும் அவன் மக்களும் புது உடைகளை யணிந்துகொண்டு, எந்தத் துக்கம் எப்படி யிருந்தாலும் பெரியவர்கள் கொண்டாடிய பண்டிகையை விடலாமாவென்று தப்புத்தாளம் கொட்டுகிறான். இவ்விதம் புதுஆடை உடுத்து மஞ்சள் குங்குமத்தோடு இருக்கத் தனக்குப் பிராப்தமில்லாமற் போயிற்றேயென்று அந்தப் பெண் படும் வாதனை தெய்வத்திற்கே தெரியும்! வீடெங்கும் சுண்ணாம்பு அடித்து வெகு சுத்தமாயிருக்க, தரையெங்கும் மெழுகிக் கோலமிட்டு வெகு பசந்தாயிருக்க, அப்பியங்க ஸ்நானம் செய்து புது உடைகளுடன் வெகு சுத்தமும் சோபிதமுமாய்க் காணப்பட, வீடும் மனிதர்களும்மங்களப்பிரஸன்னவதனராய் இலங்க,—இவ்வளவுக்குநடுவிலே கழுத்தறுபட்டுச் செத்துப்போன ஆடு கோழி பக்ஷிகளின் மாமிசங்களைப் பரிசுத்தமான வீட்டுக்குள்ளே கொண்டுவந்து சமைத்து, போதாக்குறைக்கு மதுபான வகைகளையும் பலமாய் உள்ளுக்குவிட்டு விலாப்புடைக்கப் புசித்து அது எங்கள் பெரியோர்களின் வழக்கம்—வீட்டு வழக்கம்--தலைமுறை தலைமுறையாக நடந்துவரும் பழக்கம் என்று தப்புத்தாளம் போடுகிறார்களே! ஐயோ! ஆண்டவனே, இது நியாயமா? நல்ல நாளில், நல்ல புது உடையணிந்த சுசிகரப் பொழுதில் இந்தக் கொலை பழி பாவம் செய்யலாமா? நல்ல நாளில் இவர்களைப்போலவே அந்த வாயற்ற பிராணிகளும் சந்தோஷமாய் இருக்க விடலாகாதா? எந்த சண்டாளன் தீபாவளிக்கு மாமிசம் மதுபானம் முக்கியமென்று ஆதியில் தப்புத்தாளம் கொட்டினானோ? நல்ல தினத்தில் பிராணிகளைக் கொல்வதை விட, இவர்களைப் பிடித்து ஆட்டுகிற மாய்கையையும், கர்வம், பொறாமை, கிராதக சித்தம், துரோக நினைவு—போன்ற சண்டாளத்தனங்களையும் கொன்று வெற்றிபெறவொண்ணாதா? இவைகளுக்கும் மேலாகத் தீபாவளியில் மாமிச உணவு கூடாதெனப்பேசிவிட்டு, அன்றைக்கு வயிறு வெடிக்க அந்த மாமிசங்களுடனே உண்டுவிட்டு, நான் சொன்னால் வீட்டில் கேட்கிறார்களா—என்ன செய்யட்டும்—என்னவோ வழக்கமாய்ப்போச்சுது—என்று சமாதானப் பேச்சாகத் தப்புத்தாளம் கொட்டுகிற படித்தபுத்திசாலிகளை விகடன் என்னென்று சொல்லட்டும்! விசேஷமாய்ப் படித்த கட்டைகள்தான்சொல்வதொன்றும் செய்வதொன்றுமாய்த் தப்புத்தாளம்போடுவோரா யிருக்கிறார்கள்.

* * *

இனி, சீமை மல் பீசுகளைத் தீபாவளிக்கு வேண்டியவரை எடுத்து



விட்டு, 'ஓட்' கேட்கவும், பொது விஷயங்களுக்குப் போகும்போது உடுக்கவும் உதவுவதற்காக இரண்டொரு கதர் துணிகளை வெகு கஷ்டப்பட்டு வாங்கிவிடுகிற தப்புத்தாளக்காரர்கள் எவ்வளவு பேர்! அவர்கள் அதற்கு சமாதானமாகச் சொல்லுகிற தப்புத் தாளங்கள் எத்தனை? கதர் கதர் என்று கதறிவிட்டுத் தீபாவளிக்குக் கதரே எடுக்காதவர்களின் தந்திரத் தப்புத்தாளங்களை எழுதவும் கொள்ளாது—இடமும் இல்லை!

* * *

இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக விகடன் இன்னொரு தப்புத்தாள வேடிக்கை சொல்லட்டுமா? இந்தத் தீபாவளி மாதத்திலேதான் உபாத்திமார்களிலே பலர் பையன்களிடம் வெகு விசுவாசமாயிருப்பதாகத் தப்புத்தாளம் கொட்டுவார்கள்.—ஏன்?—தீபாவளியில் வேஷ்டி பணம் இனாமாகப் பெற! தபால்காரன், முனிசிபல் சிப்பந்திகள், இன்னும் உத்தியோகம் என்ற போர்வையைப்போர்த்துள்ள பிச்சாண்டிகள், நண்பர்கள், வேலையாட்கள், அடிக்கடி காண வருகிறவர்கள், நாவிதர்கள், வண்ணார்கள் இவர்களைப்போன்ற எத்தனை எத்தனையோ பேர்களும் இந்த சமயம் பரம விஸ்வாசக் கொக்குகளாகத் தாளம் போடுவார்கள்!—ஏன்?—தங்களின் லாபத்துக்காகவும் தீபாவளி சன்மானத்திற்காகவுமே! இதிலும் மகா பசந்தாக நமது அம்மாமார்கள் இருக்கிறார்களே—செப்பரிய கோமளம்—திவ்யகுண பாப்பாள்—சிறந்ததோர் செம்பு—தாயி—ஜெகமெலாம் புகழ்பெற்ற அபரஞ்சி—மாணிக்கம்—சிரான வாணி—ராஜம்—தப்புமுறை சொன்னாத சந்திரவதனா—வள்ளி—சற்குணக்கமலம்—மயிலாள்—தத்தை மொழி நிகருற்ற தங்கம்—கலாவதி—சரசாங்கி—ஜீவாத்தினம்—ஒப்புநடை சண்முகம்—உயர்வுமிகு ஜானகி—உமைதிருவு—சாரதாம்பாள்—உத்தம நடத்தையுடைத்திலகுசாமளா—உத்கிருஷ்டமான சுந்தரி—மனோகரி—சோமவதனாள்—கல்யாணி முதலான மேனிமினுக்கி மோஹினிகளெல்லாம் என் ஆசைத்துரை நீதானடாவென்று வெகுவெகு மையல்காட்டி, தையலார் தந்திரங்களெல்லாம் நீட்டி, நீள நீள விஸ்வாசம் கூட்டி, புன்னகைப் பேட்டியோடு வேண்டிய தப்புத் தாளம் கொட்டுவார்கள்! காசிச்சேலையும், ஜரிகையிட்ட ரவிக்கையும் பின்னும் பலவும் சுற்றிக்கொள்ளத்தான் இப்படி யெல்லாமே—எங்குமே தப்புத்தாளமாய் அதிலே முடிவுபெறுகிற இந்தத் தீபாவளியை விகடன் என்னென்றுதான் சொல்லட்டும்! நன்மையான நல்ல தானம் கொட்டி நல்லவிதமான ஈசுவரத் தியானத்துடன் இப்பண்டிகையை முடிக்கக்கூடாதா? அவ்விதம் முடிக்கிற சிலரும் இதன் நடுவில் இருப்பதால்தான் நாலுமாதத்திற்கொருதரமாவது நல்ல மழை நாலு தூறலாவது தூறுகிறது!

* * *

தப்புத் தாளக்காரர்கள் தீபவாளியில் மட்டுமா இருக்கிறார்கள்? அதற்கு அடுத்து வருகிற கேதாரிநோன்பிலும் இருக்கிறார்கள்! அந்த விரத வரலாறு தெரியாமல் அதை அநுஷ்டிப்போர்களே ஆயிரம் பேர். வந்ததையெல்லாம் பார்ப்பனச்சாமி சுற்றிக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட, இவர்கள் புண்ணியப் பிரசாதம் பெற்றதாய் மகிழ்ந்து நெய்யிற் சுட்ட அதிசரங்களை வயிற்றுக்குள் தள்ளு

கிறார்கள். இதுவும் அறியாத தப்புத் தானமே! செய்யவேண்டிய முறை தெரியாத தப்புத்தானமே!

* * *

இனி, ஊரிலிருக்கிற சில தப்புத் தானக்காரர்களையும் விகடன் வெளியி விழுக்கிறேன். இப்போது 'மேயோ' என்கிற அமரிக்க ஸ்திரீ தனது "இந்தியமாதா" என்ற நூலால் எவ்வளவு தப்புத் தானங்கள் கொட்டியிருக்கிறாள்? இதைப் போலவே இந்தியாவைப் பற்றி எவ்வளவு பொய் மூட்டையான ரிப்போர்ட்டுகள் தப்புத் தானக்காரர்களால் இங்கிலாந்துக்கு அனுப்பப்படுகின்றன? இங்குள்ள "இங்கிலீஷ்மேன்" "பயனீர்" முதலிய ஆங்கிலப் பத்திரிகைகள் இந்திய ஸம்பவங்களை வேறு விதமாகத் திரித்துப் பேசிக் கொட்டும் தப்புத்தானங்களை அளவிட முடியுமா? ஜெர்மனி எவ்வளவு தப்புத் தானங்களை யடித்தது? சண்டை செய்திகளில் எவ்வளவு தப்புத்தானங்கள் கலக்கப்படுகின்றன? மஹாயுத்தத்திற்குப் பிறகு இந்தியாவுக்குப் பெரிய நன்மைகள் புரிவதாய் எவ்வளவு தப்புத் தானங்கள் கொட்டப்பட்டன? லண்டன் பத்திரிகைகள் எவ்வளவு தப்புத் தானங்களை யடிக்கின்றன? முக்கியமான சமாசாரங்களை முழு மொட்டையாக்கி அனுப்புகிற ராய்ட்டர் தந்திகளின் தப்புத்தானங்களுக்குக் கணக்குண்டா? வழக்கை நன்றாய் ஆய்ந்தோய்ந்து பாராது தப்புத் தீர்ப்புத் தானங்கள் கொட்டிவிடும் நீதியதிபதிகள் எத்தனை பேர்? கக்ஷிக்காரனுக்கு ஆசையைப்பெருக்கி அவன் செல்வத்தை உரிஞ்சிவிடும் வக்கீல்கள்—வக்கீல் குமாஸ்தாக்கள் கொட்டுகிற தப்புத் தானங்களுக்கு எண்ணிக்கையுண்டா?

* * *

வைத்தியர்கள் உதவாத மருந்துகளுக்கு உயர்ந்த பேர்கள்கொடுத்தும், உயிர்போக இருப்பவனுக்கும் மருந்தூற்றித் தந்தும் கொட்டுகிற தப்புத் தானங்கள் என்ன லேசானதா? முனிசிபல் கௌன்ஸிலர் ஆவதற்கும், போர்ட் மெம்பர் ஆவதற்குமாக நான் சுயராஜ்யக் கக்ஷி— காங்கிரஸ் கக்ஷி—ஜட்ஜிஸ் கக்ஷி என்று தப்புத் தானம் கொட்டுவோர் எத்தனை பேர்? நல்ல மனதோடு ஒருவர் ஒருவனுக்கு ஒத்தாசைசெய்யும்போது, அதைக் கெடுக்கச் சில புல்லுருவிகள் முளைத்துக் கொண்டு உபகாரியின் காதில் தப்புத் தானம் கொட்டுவது கொஞ்சமா? வீட்டிற்குள்ளே ஒருவருக்கொருவர் ஆகாமற் போகும்படிக் கொட்டுகிற குண்டுணிக் கலகத் தப்புத்தானங்களை அளவிட முடியுமா? மாமியின் தப்புத் தானம், மருமகளின் தப்புத் தானம், மாற்றாந்தயின் தப்புத் தானம், வாழ்கிற பெண்ணுக்குத் தாய் வீட்டார் கற்பித்துக் கெடுக்கும் தப்புத் தானம், ஆகப்போகிற கல்யாணத்துக்கு நடுவில் குச்சியை நுழைக்கிற தப்புத் தானம், ஒன்றாயுள்ள குடும்பங்களைப் பிரிக்கவைக்கிற தப்புத் தானம், இன்னும் மித்திர பேதக்காரர்களின் தப்புத் தானம், கலக்கார நாய்களின் தப்புத் தானம்—இவையெல்லாம் அந்தந்த குடும்பங்களைச்சூழ்ந்து கொண்டு படுத்துகிற பாடு கொஞ்சமா?

* * *

விளம்பரங்களின் தப்புத் தானம் தாய்ப் பாலைவிட சீமை தகர டப்பிப் பால்—மெல்லின்ஸ் ஆகாரம்—அது போன்ற பலவற்றையும் மேலானதென்று நினைக்க வைக்கிறதல்லவா? இன்னும் பொய்விளம்பரத் தப்புத் தானத்தால் எத்தனை பேர்களின் நல்ல சரக்குகள் விலையாகாமற் போகின்றன? கலப்பு நெய்களின் சுளுவான விலையினது தப்புத் தானத்தால் நல்ல நெய்யாக விற்கும் வியாபாரி தனக்கு வியாபாரம் நடக்கவில்லையே யெனப் புலம்புகிறான்! ஒருவனே பல பெயர்களுடன் பல கம்பனிகளென்ற கம்பனி வேஷம் போட்டுச் செய்கிறமோசக்காரக் கேட்லாக் கம்பெனித் தப்புத் தானத்தால் உண்மையில் கௌரவமாயுள்ள பெரிய கம்பெனிகளின் பேர் யோக்யதை கெட்டு விடுகின்றது! கடன் வாங்கும் போது இதோ கொடுத்து விடுகிறேனென்று எவ்வளவு சப்புத் தானங்கள் கொட்டுகிறார்கள். புஸ்தகங்களைக் கமிஷனுக்கு விற்றுக் கொடுப்பதாகச் சொல்லிப் பெற்று விற்றபணத்தை விழுங்கிவிட்டு வெளியூராருக்கு இச் சென்னையிலுள்ள புஸ்தக வியாபாரிகளிற் சிலர் இன்னும் புஸ்தகம் விற்கவில்லையென்று கொட்டும் ஏமாற்றுத் தப்புத்தானங்களை எண்ணமுடியுமோ? சாஸ்திரம் படிக்காமலே சாஸ்திரிகளாகிப் புரோகிதம் செய்யவரும் பிராமணர்களது மந்திரங்களின் தப்புத் தானங்களுக்கு அளவு தான் ஏது? உண்மையான வேதத்திலேயேஇடையிலே நுழைக்கப்பட்ட தப்புத் தானங்களை என்னென்று கூற? புராணங்களில் வருகிற தப்புத் தானங்களைச் சொல்ல முடியுமா? பாசிகலந்து பரிமளிக்கும் குளங்களை தேவ லோகத்து இந்திரன் வந்து வெட்டினானென்ற தப்புத் தானங்கள் எத்தனை எத்தனையோ?



* * *

இனி, அந்தந்த மதங்களிலே புகுந்துகொண்டுள்ள தப்புத் தானங்கள் கொஞ்சமா? ராஜ்பால் போன்றோர் மற்றொரு மதத்தைப் பற்றி நூல் எழுதிக்கொட்டும் முட்டாள்தனமான தப்புத் தானங்களுக்குக் கணக்குண்டா? புருஷன்—மனைவிகளுக்குள்ளே எவ்வளவுதப்புத் தானங்கள்? இறந்த வீட்டிலே சொத்துகளை மறைத்துவிட்டுக் கொட்டும் தப்புத் தானங்கள் எவ்வளவு? பெண்கள் கூட்டம் போடுகையிலும், வீட்டிலுள்ள புருஷர்களுக்குத் தெரியாமல் நகைகளை விற்பதிலும், இரவல் பெறுவதிலும்—கொடுப்பதிலும் எவ்வளவு தப்புத் தானங்கள் புறப்படுகின்றன? புளித்த பழத்தை நல்ல பழமென்றும், அழுகிய தேங்காயை வெகு முற்றலென்றும், அரிசியில் ஜலமும் தவிடுங் கலந்துவிட்டுப் புழுத்த அரிசியை நல்ல அரிசி யென்றும் சொல்லுகிற தப்புத் தானங்களுக்கு எல்லை யேது? உணவுப் பொருள்களில் கல்லும் மண்ணும் கலந்து எடையை அதிகப்படவிட்டு வெகு நல்ல சரக்கென்று காதுக்கு இனிமையாய்த் தப்புத் தானம் போடுவோர் எத்தனை பேர்? இந்தப்பருப்பு நன்றாய் வேகவில்லை யென்று வெளியில் இருப்பதைக் காண்பித்தால், அடே! உள்ளே போய் அந்த நல்ல பருப்பிலிருந்து எடுததுவந்து கொடு என்று எஜமான் சொல்லி, உள்ளேயிருக்கும் அதே பருப்பைப் புதிது போல் காண்பித்து ஏமாற்றுகிற தப்புத்தானங்கள் நித்த நித்தமும் கேட்டுக் கொண்டு வரப்பட்டவைகள் தானே! உத்தியோகஸ்தர்களின் லஞ்சத் தப்புத்தானங்கள் கொஞ்சமா? மேல் பதவிக்கு உயர எவ்வளவு தப்புத் தானங்கள்? யாத்திராவாசிகளிடம் காசு பறிக்கக் கோயில் குருக்கள் அடிக்கும் தப்புத் தானமேளங்கள் எத்தனை? தட்டான், கடிகார ரிப்பேர் செய்பவன், ஓட்டு கேட்கவருகிற பெரிய மனுச அண்ணாத்தைகள், பெண்களை மயக்க நினைக்கிற ஆடவர் கூட்டங்கள், பால்காரி, தயிர்காரி, இன்னும் ஆயிரம் பேர்களின் தப்புத் தானங்களுக்கு வகை தொகை யேது?

பத்திரிகைகள் போடும் தப்புத் தாளங்கள் எத்தனை? காசிலே கவனமாயுள்ள தேசாபிமானிகள் போடும் தப்புத் தாளங்கள் எத்தனை? ஆசார சீர்திருத்தக்காரர்கள், விவாக தரகர்கள், டம்பப் பேர்வழிகள், பொறுமைப் புலிகள் போடும் தப்புத் தாளங்கள் ஒன்று இரண்டா? நம்பினவனைக் கைநழுவ விடுகிறதப்புத்தாள ஓசைகள் எண்ண முடியுமா?-எட்டிலடங்குமா ?

* * *

ஆ! சாமியே! ஆண்டவனே! இந்தத் தப்புத் தாளக்காரர்களை ஏன் உண்டாக்கினாய் ? மனித ஜீவன்களை உண்டாக்கியபோதே இந்தத் தப்புத் தாளச் சாத்தான்களையும்அவர்களோடு கூடவே படைத்ததின் காரணம் என்னவோ? ஆ! இந்த தப்புத்தாளக் காரர்களால் உலகம் ஏமாறுகிறது, ஊர் ஏமாறுகிறது, குடும்பம் ஏமாறுகிறது, கண் மூடியவனின் மனைவி மக்கள் ஏமாறுகிறார்கள், உறவு ஏமாறுகிறது, உருக்கம் ஏமாறுகிறது, இரக்கம் ஏமாறுகிறது, சமாதானம் ஏமாறுகிறது, நட்பு ஏமாறுகிறது, நலம் ஏமாறுகிறது, நல்ல அன்பு ஏமாறுகிறது, மதம் ஏமாறுகிறது, பக்தி ஞானம், விரத நோன்புகள் ஏமாறுகிறது, வீரம் ஏமாறுகிறது, பேரம் வர்த்தகம் ஏமாறுகிறது,உத்தியோகம் ஏமாறுகிறது—அதன் உயர்வு ஏமாறுகிறது, ஒற்றுமை ஏமாறுகிறது, நம்பிக்கை ஏமாறுகிறது, உபகாரம் ஏமாறுகிறது, ஆகஎல்லாமுமேஏமாறி, மாறி, நாறி, மீறி, அழுகி, அர்த்தமே கெட்டு அல்லோல கல்லோலமாய் விடுகின்றது! ஆகவே, விகடனும் இதை என் நஞ்சான்குஞ்சான்களுக்கு எடுத்துக்காட்டி, தப்புத் தாளக்காரர்களின் வரிசை வகைகளையெல்லாம் சொல்லி, இனி இந்த ஐப்பசிமாதம் வரப்போகிற தீபாவளியிலே பண்டிகையின் நல்ல கருத்து அறிந்து, நல்லவிதமாய் செலவிட்டு, மாமிச மது பானங்களை விலக்கி, பரிசுத்தமான பட்டுபோன்ற கதர் உடைகளை யணிந்து தெய்வத்தியானமாய் சந்தோஷத்தோடு கொண்டாடும்படியாய் ஒரு முன் எச்சரிப்பாக எச்சரித்து உச்சரித்து விட்டேன். நீங்களும் நல்ல வழி தெரிந்து கொண்டு தீபாவளியில் இந்த விகடப் பிரதாபனையும் கொஞ்சம் நினைத்துக் கொள்ளுங்கள். தீபாவளி ஞாபகமாக ஒரு புதிய சந்தா சேர்த்து , அனுப்புங்கள். எல்லோருக்குமே விகடனின் தீபாவளி வந்தனம். ராம் ! ராம் ! சுபம் ! சு ! சுவாஹா ! !

---

கொஞ்சம் ஒதுங்குக:—வளைந்த வில் சிறிது நிமிரவேண்டும். அப்போது தான் வில்லுக்கு உறுதி உண்டாகும். ஒன்று கூடியவர்கள் கொஞ்சம் பிரிந்தால் மதிப்பு உயரும். இவ்விதமே ஸதிபதிகளுக்குள் சச்சரவு உண்டானால் இருவருள் எவரேனும் ஊர்போய் சிலநாள் தூர இருந்து திரும்பிவருவதே பழய பிரியத்தை மறுபடியும் பெற நன்மருந்து.

சோம்பேறியின் வார்த்தையை நம்பாதே:—வீட்டிலிருந்து கொண்டே இன்னும் ரயிலுக்கு வெகுநேரம் இருக்கிறதே, 10-மணிக்கல்லவா வண்டி போகிறது என்பவனின் வார்த்தையைக் கேளாதே. நீ உடனே ரயிலுக்குப் புறப்பட்டுவிடு, நீ இப்போது 8–மணி என்று எண்ணினால் கடிகாரத்தின்முள் 9-ல் இருக்கக்கூடும். நீ போய்ச் சேர முக்கால்மணியாவது பிடிக்கலாம், ஆதலின் சீக்கிரம் புறப்படு.




# இயேசு நாதர்

[குறிப்பு :—எம்மதமும் சம்மதம். ஸமரச ஞானம் பிரதானம். அவரவர் தங்கள் மதத்தைப் போற்றிக் கொண்டு பிற மதங்களிலும் கௌரவ சிந்தை வைக்கவேண்டும். பின்வரும் பாடல்களில் உள்ள இயற்கையின் அழகும், கவிதையின் அழகும் எவர் மனத்தையும் பூரிக்கச் செய்யும். 'எளிய நடையில் கவிதை செய்யும் கடுமையான தொழில் மிகவும் அரியது.' பிற மதத்தினர் "இயேசு நாதா" என்பதற்குப் பதிலாகத் தங்கள் மதத்திற்குப் பிரியமான பெயரைச் சேர்த்துக் கொண்டால் அவர்களுக்கும் இது சர்க்கரைக்கட்டியாகிவிடும். டா-ர்.]

1

சீர்தரும் வாழ்க்கை பொய்யே, செல்வமும் சுகமும் பொய்யே
பாருறும் இன்டம் பொய்யே, பாவையர் மயல்கள் பொய்யே
சார்கலை மேன்மை பொய்யே, சகலமும் பொய்யே உந்தன்
ஏர்பதம் மெய்யே என்றேன், ரட்சகா யேசுநாதா.

2

கனம்புகழ் சிலரின் நாட்டம், கல்விநூல் சிலரின் நாட்டம்
கனகம்மண் சிலரின் நாட்டம், கண்ணின்பஞ் சிலரின் நாட்டம்
மனைமக்கள் சிலரின் நாட்டம், மனத்துயர் வாழ்வுற்றாலும்
எனதகம் நாட்டம் நீயே ரட்சகா யேசுநாதா.

3

இரவிலேன் வெள்ளி நீயே, இருளிலேன் வெள்ளி நீயே
குருசிலேன் மகிமை நீயே, குறைவில் என் செல்வம் நீயே
சிரமதேன் கிரீடம் நீயே, தித்திக்கும் என் மதுரம் நீயே
இருமைக்கும் வாழ்வும் நீயே ரட்சகா யேசுநாதா.

4

தாமரைக்குறவு தண்ணீர் தளர் சுடர்க்குறவு எண்ணெய்
பூமலர்க்குறவு வெய்யோன், புலவர்கட்குறவு கல்வி
சாமுடற்குறவு ஜீவன், தவிப்போடு களிப்புற்றாலும்
ஏழுயிர்க்குறவு நீயே ரட்சகா யேசுநாதா.

---

177. ஒருவருக்கொருவர் துவேஷப்படும்படி தூண்டிவிடுவது தங்களின் சொந்த லாபத்துக்காக.

5

வனமிடை வாழும் சிங்கம், மலர்மிசை வாழும் வண்டு
புனலிடை வாழும் மச்சம், புகழிடை வாழ்வர் மன்னர்
மனதிடை வாழும் அன்பு மதுரமே நிலையே உன்சொல்
இனிமையில் வாழும் நெஞ்சம் ரட்சகா யேசுநாதா.

6

உலகமோர் பக்கம் என்றன் உடல் மறுபக்கம் பொல்லா
அலகையோர் பக்கம் நின்றேன் அகத்தினிற் கினிமை காட்டி
பல நினைவால் வலையில் படமயல் மூட்டுதையோ
இலகென துளத்தில் தோன்றி, ரட்சகா யேசுநாதா.

7

நேரிடும் துயர்கள் கோடி நினைவெழும் மயல்கள் கோடி
போரிடும் பகைஞர் கோடி புகலினி உனையே யன்றி
ஆரிடம் சேர்வேன் ஐயா ஆபத்திற்குதவி யுந்தன்
ஏரடிக் கடையம் என்றேன் ரட்சகா யேசுநாதா.

8

சாவெதிர்த்தெனக் கென் செய்யும் சடமெதிர்த்தெனக்கென்செய்யும்
தீ யெதிர்த்தெனக்கென் செய்யும் ஜெகமெதிர்த் தெனக்கென் செய்யும்
பேயெதிர்த் தெனக்கென் செய்யும் பிணியெதிர்த் தெனக்கென்செய்யும்
ஈயும் நின்னருள் உண்டானால் ரட்சகா யேசுநாதா.

9

சுடர்தனை மலர் என்றெண்ணி, சுற்றி வந்துயிரை மாய்க்கும்
மட சிறகினங்கள் போலென் மனமின்ப மாய்கை தன்னில்
தொடர்வதைக் கண்டிரங்கி துணைநின்றேன் புலனைக்கட்டி
இடர்வரும் முன்னே காப்பாய் ரட்சகா யேசுநாதா.

10

சுகமுறில் போருக்கேவும் தோல்வுறில் துயருக்கேவும்
மகிழுறில் பெருமைக்கேவும் வறுமையில் திருட்டுக்கேவும்
அகம் நினைவொன்றும் வேறு அயலவர்க் குரைக்கும் நெஞ்சம்
இகலற அமைவதென்றோ ரட்சகா யேசுநாதா.

M. T.

---

178. *தன்னைக் காணவந்தவர்களிடத்தில் கர்வத்தோடும் பதில் சொல்லித் தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்வோர் வியாபார தந்திரம் தெரியாத மூடராவர்.*

II

## ஸ்ரீ ஹரிக்கண்ணி

(311-ம் பக்கத் தொடர்ச்சி.)

91. *இன்னும் பிறப்பிறப்பை யெய்தாதுன் சேவை பெற*
*என்னுனே நீ நின் றிரட்சிப்பாய் ஸ்ரீஹரியே.*
92. *பிறவி பெறுவதற்கும் பின்வாங்கேன் பெற்றால்*
*மறவாதுன்றாளை வழுத்தவருள் ஸ்ரீஹரியே.*
93. *எடுக்கும் பிறவிகளி லெற்கில்லாணட்டம்*
*அடுக்காமற்காத்துன் னருள்புரிவாய் ஸ்ரீஹரியே.*
94. *விதிக்கும் பிறவியில்யா மேவுநாளுன்னைத்*
*துதிக்க நீடாயுடந்து துன்பகற்றும் ஸ்ரீஹரியே.*
95. *துதிக்கவா மீந்தெமது துன்பகற்றியின்பக்*
*கதிக்கு வழி திறந்து காத்தருள்வாய் ஸ்ரீஹரியே.*

(அடுத்த ஸஞ்சிகையில் முடிவு.)

தஞ்சை - சங்கு-இராமசாமி நாயுடு.

### வீட்டைக் கட்டிப் பார்!

*பெரிய வீடுகட்டி இழப்பதைவிட சொந்தக் கூரை வீட்டிலிருப்பது மேல். எடுத்த எடுப்பிலேயே நடு ஆற்றில் குதித்தா நீந்துக் கற்றுக்கொள்வது? அதன் முடிவு முழுகிப்போவதைத் தவிர வேறு என்ன? பெரிய வீடாக முதலிலேயே கட்ட ஆரம்பிப்போருக்கும் இதே கதி தான். அதற்குப் பட்ட கடன் தீராக் கடனாகி விடுகிறது! குடியே முழுகியும் போகிறது. வெகு பேர்களுக்கு ஆசையோடு கட்டிய வீட்டை விற்கும்படியும் நேரிட்டு விட்டது! பல வீடுகள் ஏலத்திலும் போயிருக்கிறது. வீட்டை முதலிலேயே பெரிதாகக்கட்டி முன்னுக்கு வந்தவர்கள் மிகவும் கொஞ்சம். மறுபாதி கட்டமுடியாமல் அந்த இடத்தில் புல் முளைத்துப் போனதும் உண்டு. நீந்தக் கற்பவன் நதியின் கரையோரத்திலுள்ள சிறிதளவு ஜலத்தில் நீந்தப் பழகித் தேர்வதுபோல், முதன் முதலில் சிறிய வீடாகவே அமைத்துக்கொண்டு, அந்த வீட்டு வாழ்வு தங்களுக்குப் பொருந்தி, அதை சமாளிக்கத்திறம் உண்டானதின்மேல், அதற்குப் பிறகு விஸ்தரிக்கும் யோசனை கொள்வதே சரி. அதுவே முழுகிப்போகாதிருக்க வழி.*

---

179. *அவன் களங்கமற்றிருந்தால் இவனும் களங்கமற்று நண்பனாவன். ஒருவன் நெஞ்சு கள்ளமாயின், மற்றவனும் அது தெரிந்து விலகுகிறான்.*




நாம் சுவாஸம் விடும்போதெல்லாம் இரண்டு காரியங்கள் செய்கிறோம். அதாவது புதிதாய்ச் சிலவற்றை யுட்கொள்ளுகிறோம்; சிலவற்றை வெளியே கொண்டுவந்து தள்ளுகிறோம். உட்கொள்ளுவதற்கு உச்சுவாஸம் என்றும், வெளியில் விடுவதற்கு நிச்சுவாஸம் என்றும் பெயர். வெளியிலிருந்து சுத்தமான காற்றை நாம் உட்கொள்ளுகிறோம்; வெகுகாலம் தேஹத்தில் உபயோகப்பட்டு விஷமாய்ப்போன ரக்தங்களின் பாகங்களைக் கெட்ட காற்றாகவும், பசைகளாகவும், வாய்—நாசிவழியாக வெளியே தள்ளுகிறோம். நமது தேஹத்திற்குப் புஷ்டியை உண்டாக்குகிற ரக்தமானது நாம் புசிக்கும் போஜனத்திலிருந்து உண்டாகின்றது. அந்த ரக்த முண்டாவதற்குமுன், நாம் உண்ணும் உணவுகள் அன்னப்பாகாகி அது இருதயத்திற் சேர்ந்தவுடன் அதை நல்ல ரத்தமாக மாற்ற அதனுடன் ஒரு வஸ்து கலக்கவேண்டியிருக்கிறது. அதற்குத்தான் சுவாஸ வாயு என்று பெயர். நமது தேகத்திலுள்ள ரத்தமெல்லாம் நாம் உட்கொள்ளுகிற காற்றிலுள்ள சுவாஸ வாயுவாலேதான் சுத்தப்பட வேண்டும்.

நாம் உட்கொள்ளும் காற்றானது, நம் தேஹத்திலுள்ள அழுக்குகளைச் சுத்தி செய்து கெட்டுப்போன வஸ்துக்களை நாம் விடுகிற சுவாஸத்துடன் வெளியே கொண்டு தள்ளுகிறது. நாம் அடிக்கடி சுவாஸவாயுவை உட்கொள்ளாவிட்டால் தேஹத்திலுள்ள ரக்தமெல்லாம் ஒருவகை விஷப்பொருளாய்மாறி நம்மைத் துரிதத்திலே கொன்றுவிடும். அதற்காக நாம் அடிக்கடி வெளியிலிருக்கிற சுத்தமான காற்றை உட்கொண்டு அவைகளைச் சுத்திசெய்யவேண்டும். தண்ணீரில் மூழ்கினவன் சாவதற்குக் காரணம் இதுதான். தண்ணீருக்குள் காற்றுக்கு அவகாசமில்லாமையால் மூழ்கிப்போனவன் மூச்சுவிடக்கூடாமலாகிறது. அதனால் அசுத்தமாய்ப் போன ரக்தம் தேஹமெங்கும் வியாபித்து, மூளையையும் மனதையும் வேலை செய்யவொட்டாமல் அடக்கி அரை நிமிஷத்தில் கொன்றுவிடுகிறது. இன்னும் வேறுகாரணங்களால் மூச்சடைத்துச் சாவதும் இப்படியே.

180. விதவா விவாகப் பேச்சைவிட, விதவைகள் நிர்ப்பந்த கஷ்டமின்றி சுகமாயிருக்க வழிதேட வொண்ணாதா ?



நமக்குப் பிராணாதாரமான சுவாஸவாயு, வாயுமண்டலத்தில் ஏகதேசமா யிருக்கின்றது. அதை நாம் பகுத்தறிய முடியாது. ஆயினும் பூத தத்துவசாஸ்திரிகள், அது கண்ணுக்குத் தோன்றா திருந்தாலும், அதை வாயு மண்டலத்தினின்றும் வேறாய்ப்பிரித்து, ஒரு பாத்திரத்துளடக்கி, அதற்கும் மற்ற வாயுவுக்குமுள்ள வேறுபாட்டை இன்னதென்று கண்டறிகிறார்கள். காற்று இப்படிப்பட்டதென்றும் அதன் செயல்கள் இன்னவென்றும் எவருக்கும் தெரிந்ததே. ரப்பரால் பந்து தைக்கிறார்களே. அதைப் பளுவாக்கி எழும்பச்செய்வதும் காற்றுதான். அநேகர் உறைக்குள் காற்றை அடைத்து அதை மெத்தைகளாவும், சேணங்களாகவும் உபயோகிக்கிறார்கள்.

காற்றைப் போலவே சுவாஸ வாயு நமக்குப் புலப்படாவிடினும், அதன் செய்கைகள் நன்றாய்த் தெரிகின்றன. ஒரு பாத்திரத்தில் சுவாஸ வாயு அடைத்தால், அது மற்ற ஸாதாரணமான காற்றுள்ள பாத்திரத்தைவிட அதிகமான பளுவுள்ளதாயிருக்கிறது. ஒரு வர்த்தியைக் கொளுத்தி சுவாஸவாவு நிறைந்த இடத்தில் வைத்தால் மற்ற இடங்களிலிருக்கும் விளக்குகளைவிட நன்றாய்ப் பிரகாசிக்கும். வர்த்தி அணைந்துபோனவுடன் அணைந்த சுடுகை மாறுவதற்கு முன் அதை சுவாஸவாயு நிறைந்துள்ள இடத்தில் கொண்டுபோய் வைத்தால் உடனே பற்றிக்கொள்ளும்.

சுவாஸவாயுவு இல்லாத இடத்தில் நாம் விளக்கேற்றி வைத்தாலும் அது தானே நின்று போம். நெருப்பை உண்டாக்குவது வாயுமண்டலத்தில் கலந்திருக்கும் சுவாஸ வாயு தான். எவ்வளவு துரிதமாய் சுவாஸ வாயு சேர்கிறதோ அவ்வளவு நன்றாய் நெருப்பு எரியும். சுவாஸவாயுகூடக் கலக்காவிட்டால் எதிலும் தீ யண்டாது. நெருப்பு எரியாமலிருந்தால் அதை நாம் வாயினால் ஊதுகிறோம்; உடனே அது நன்றாய்ப் பற்றிக்கொள்கிறது. அதற்குக் காரணம் யாது ? சுவாஸவாயு அதிதுரிதமாய்ச் சேருவதுதான். ஆதலால் பிராணனுக்கும் நெருப்புக்கும் ஆதாரம் சுவாஸ வாயுவே.

இப்படியாக உலகத்திலுள்ள எல்லா வுயிர்க்கும் தேஹபுஷ்டியைத் தருகிற ரத்தம் உண்டாவதற்கு உணவுகளும், அப்படி யுண்டான ரத்தம் மாறுபட்டுப் போகாமல் அதைச் சுத்தப்படுத்தி வைத்திருக்க சுவாஸவாயுவும் படைத்து நம்மைக் காக்கும் கடவுளை வாழ்த்துவதைவிட நாம் உடம்பெடுத்ததற்குப் பயன் வேறுண்டோ?

அவனுக்குப் பிறகோ?:—ஒரு மனுஷ்யனால் அந்த குடும்பத்தின் செல்வவிருத்தியும் ஓங்குகையும் வாழ்வும் பேரும் எல்லாமுமே. அவன் கண்மூடிக் கொண்டாலோ? அவ்வளவுடன் எல்லாம் முடிவு. அவனுக்கிருந்த தெய்வீக நிர்வாக சக்தி பிறருக்கு அமைவதில்லை. தெய்வ ஏற்பாடு அப்படியாக்கும்!

இருவகையிலும் விழும்:—வீட்டுச் சுவற்றுடன் ஒட்டி வளர்ந்துள்ள மரத்தை 4 சுவருக்குக் கெடுதியென்று வெட்டுவதிலே, அந்த சுவரே மரத்தால் தாக்குண்டு இடிந்து விழுந்தாலும் விழுந்துபோம்.

181. ஆப்பம் தோசை விற்கும் பெண் தினம் இரண்டு ரூபா சம்பாதிக்க, பெரிய படிப்பு படித்தவர்களோ வேலைக்குத் திண்டாடுகிறார்கள்.

# பழமொழிக் குறிப்புகள்

## 1. அன்பு

(287-ம் பக்கத் தொடர்ச்சி.)

77. கடித்த பாக்கு கொடாத சிற்றப்பன் கடைத்தெரு வரைக்கும் வந்தாலும் வழிவிட.

கடித்தபாக்கு என்பது எவரும் விரும்பிவேண்டாத அவ்வளவு கேவலமான வஸ்து. அதுகூடத் தர மனம் ஒப்பாத ஒரு சிற்றப்பன் மகா உபசாரமாய்க் கடைவீதிவரைக்கும் வந்து வழிவிட்டானென்பது அவனது ஒப்பாரித்தனமான அன்பைக் காட்டுமே தவிர அதில் யாருக்கு என்ன பிரயோஜனம்? அவனது வஞ்சகத் தன்மையை எவர்தான் அறியமுடியாது? கடித்தபாக்கையே தராதவன் பிறகு என்னத்தை வாரிக் கொடுத்துவிடப் போகிறான்? அவன் மேலுக்கு வெகு அன்பும் உபசரிப்புமாகச் சொல்லும் வார்த்தைகளால் வயிறு நிறைந்துபோமா? இவ்வளவு பரம லோபிகளும் உலகத்தில் இருக்கிறார்களல்லவா? இதற்கு ஒரு கதையும் உண்டு.

ஒரு ஊரில் மிகுந்த தர்மகுணப் பிரபுவாக ஒருவர் இருந்தார். அவர் சிறு பருவமுதற்கொண்டு நல்ல உழைப்பாளி. தன் கையாலேயே மேன்மையான ஸ்திதிக்கு வந்தவர். அவருக்கு ஒரு தம்பியுண்டு. அவனையும் அவன் குடும்பத்தையும் தன் வீட்டிலேயே வைத்துக் காலமுழுதும் ஆதரித்து வந்தார். தனது ஒரே பெண்ணை அடுத்த கிராமத்திலிருந்த ஒரு உத்தம வரனுக்கு விவாகம் செய்து கொடுத்தார். நாள் செல்லச் செல்லத் தம்பியின் கபட குணமும் அவருக்குக் கொஞ்சம் தெரிந்தது. தனது சொத்துக்களைத் தனது பெண் பேருக்கு எழுதினால் அவள் புருஷன் வீட்டார் அதை அழித்துவிட்டால் என்ன செய்வதென்று யோசனை. மேலும் அது தன் தம்பியைப் பகைத்துக் கொண்ட மாதிரியாகவும் ஆகும். இதற்காகத் தன் பிராண ஸ்நேகிதனாக இருந்த ஒருவர் பேருக்குச் சிறுகச் சிறுக விக்கிரயத்திற்குக் கொடுத்துவிட்ட மாதிரியாக ரகசியத்தில் தனது நிலங்களையும் வீடுகளையும் அவன் பேருக்குச் செய்து வைத்துவிட்டு வீட்டிலுள்ள மற்றவைகளைத் தன் தம்பிக்கென்று விட்டு விட்டார். இது நடந்து நெடுநாளைக்குப் பின்பு அவர் காலஞ்சென்றார். அந்தியத்தின்போது தன் குமாரத்தியைப் பார்த்து எல்லாவற்றுக்கும் உன் சிற்றப்பன் இருக்கிறான். அவன் எல்லா சொத்துக்களையும் பாதுகாத்து உனக்குக் கொடுப்பான் என்று தெரிவித்தார். அதையும் அந்தப் பேதமைப் பெண் நம்பிக்கொண்டாள். அதன்பின் தன்னருகில் கண்ணீர் விட்டபடி கலங்கிக் கொண்டு உட்கார்ந்திருந்த நண்பனைப் பார்த்து ரகசியமாய் யாவற்றுச் சொத்துக்களையும் தன் பெண்ணுக்குச் சேர்க்கும்படி சொல்லிவிட்டுக் கண் மூடுவதானார்.

182. ஒரு மனைவியிருக்க மற்றொரு பெண்ணையும் மணந்து மூத்தியவளின் வாழ்வை ஸஞ்சலப்படுத்துவோரின் ஆயுள் நாளைக் கடவுள் சுருக்கி சஞ்சலப்படுத்தி விடுகிறார்.



அவரது நண்பனோ இந்தச் சிற்றப்பனின் போக்கு எப்படியிருக்கிறதென்று கடைசிவரைக்கும் விட்டுப் பார்த்துத் தெரிந்துகொண்டு பிறகு தனது எதிர்ப்பைக் காட்டலாமென்று எதும் தெரியாதவன் போல் நடந்துகொண்டான். தன் பேருக்கு விக்கிரயமான நிலம் வீடுகள் முதலியவைகளைத் தன் பேருக்கு ரகசியத்தில் மாற்றிக் கொண்டு அதற்குள்ள வரிகளை மட்டும் தானே செலுத்தித் தனது பாத்தியதையை ஸ்தாபித்துக் கொண்டுவந்தான். இந்த உள் மர்மம் படிப்பு வாசனையில்லாத சிற்றப்பனுக்குத் தெரியாது. கருமகிரியைகள் யாவும் முடிந்த பின்பு பெண்ணும் தன் கணவன் வீட்டிற்குப் புறப்பட்டாள். அப்பொழுது சிற்றப்பன் வெகு பிரியமாக எல்லா சொத்தும் உன்னுடையதுதான்; சில கடன் வகைகள் இருக்கின்றன; அவைகளை ஒரு விதமாய்த் தீர்த்துவிட்டு அறுப்பு முடிந்ததும் விற்றுப் பணமூட்டையுடன் உன்னிடம் வருகிறேன் என்று வெகு பிரியமாய்ச் சொல்லியனுப்பினான். அதையும் அப்பெண் நம்பிக்கொண்டு சென்றாள். வருஷங்கள் போய்க்கொண்டேயிருந்தன. ஒரு காசுகூட அப்பெண்ணுக்குச் சிற்றப்பன் தந்தவனல்ல. பணத்துக்காகவும் நெல்லுக்காகவும் அப்பெண் தன் சிற்றப்பனிடம் வரும்சமயமெல்லாம் வெகு பிரியமாகப் பேசி, "எல்லாம் உனக்குத்தான்" என்கிற பாட்டைப் பாடி, இன்னும் இரண்டுமாதத்தில் கொண்டு வந்து கொடுத்துவிடுகிறேனென்பான். அதை நம்பிக்கொண்டு அந்தப் பெண் போவாள். இவ்விதமும் மூன்று வருஷங்களாயின. பெண் அலைந்ததுதான் மிச்சமாயிற்று.

அந்தப் பெண் வாழ்ந்துவந்த இடத்தில் காலவேறுபாட்டினால் பலவித நஷ்ட கஷ்டங்கள் தோன்றி, வீடு நிறைய இருந்த மனிதர்களும் சின்னாபின்னமாய்ப் பல இடங்களுக்கும் சிதறி, உள்ள சொத்துக்களும் கைவிட்டுப் போய், அன்றைய புசிப்புக்கே பட்டினி கிடக்கும்படியான நிலைக்கு வந்தது. இந்தக் கேவல ஸ்திதியில் பெண்ணின் புருஷனுக்கு ஒரு நூறு ரூபா கடன் இருந்தது. அதைத் தீர்க்க வழியில்லை. கடன்காரனோ மிகவும் நிர்ப்பந்தப்படுத்தினான். பெண்ணின் தேகத்தில் ஒரு நகையுமில்லை. எதையும் விற்றுத் தர வழியுமில்லை. உன் சிற்றப்பன் பெரிய பணக்காரனாய் உன் தந்தையின் சொத்துக்களை வைத்துக்கொண்டு வாழ்கிறானே, அவனிடமாவது போய் இந்த சமயத்தில் கேட்கக் கூடாதா? இந்த சமயத்திற்கு உதவாதவன் எந்தக் காலத்தில் அவன் ஒருமிக்க வாரித் தந்துவிடப் போகிறது? என்று வருத்தமாய்க் கணவன் அந்தப் பெண்ணைப் பார்த்துச் சொன்னான். அவளுக்கும் அது மனதில் சுருக் என்று தைத்தது. எவ்விதமும் இம்முறை தன் சிற்றப்பனைக் கேட்டு வாங்கி வருவதாகச் சொல்லிப் புறப்பட்டாள். வண்டிக்குக் காசு இல்லாததால் கால் நடையாகவே இரண்டு நாள் நடந்து தன் சிற்றப்பனிடம் போய்ச் சேர்ந்து தன் கஷ்டங்களைச் சொல்லி எவ்விதமும் தனக்கு ஒரு நூறுரூபா இந்த அவசர சமயத்திற்குக் கொடுக்கவேண்டுமென்று கண்ணீரும் கம்பலையுமாய் வேண்டிக் கொண்டாள்.

சிற்றப்பனென்ன லேசானவனா? வெகு பிரியமாய் எல்லாவற்றையும் கேட்பது போல் நடித்துக் கேட்டுவிட்டு, ஐயோ அம்மா, நேற்றுத்தானே அவ்வளவு பணமும் வைத்திருந்தேன். நேற்றே வந்திருந்தால் கொடுத்திருப்பேனே! அந்தக் கடன்காரப் பாவியல்லவோ நேற்று சாயந்திரம்வந்துகொண்டு

183. ஒட்டாது தூர ஒதுங்கி நிற்போருக்கு நல்லபேர்! கிட்ட நெருங்கிக் கலந்து பாடுபட்டவர்களைத்தான் வீணே பகைக்கிறார்கள்!

